REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 15 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :129 பங்குனி 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 03 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# 151 பேருக்கு கொரானா

யாழ்ப்பாணம், ஏப். 3

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் மூவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு நேற்றிரவு அறிவித்துள்ளது. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 148 இலிருந்து 151 ஆக உயர்ந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் 21 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். நான்கு பேர் 02

## இன்று முடிவு தெரியும்

யாழ்ப்பாணம், ஏப். 3

காங்கேசன்துறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் எஞ்சிய 10பேரின் மாதிரிகள் நேற்று எடுக்கப்பட்டுள்ளன. அவை அநுராதபுரத்துக்கு அனுப்பி 02

## 10,039 பேர் இதுவரை கைது

கொழும்பு, ஏப். 3

நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலத்தில் அவற்றை மீறிய 10 ஆயிரத்து 39 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் 02

## இலங்கையில் கொரோனா சாவு 4

கொழும்பு, ஏப்ரல் 3

இலங்கையில் கொரோனா 'கொவிட் 19' வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் ஒருவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4ஆக உயர்ந்துள்ளது.

அங்கொடை ஐ.டி.எச். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 58 வயதுடைய ஆணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் 02

## நாட்டில் அபாய நிலைமை

### அரசு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 3

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும் கூட அடுத்த வாரங்களில் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் மோசமானதாக அமையலாம் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதால் இந்த அபாய நிலைமையைக் கருத்தில்கொண்டு நாம் அனைவரும் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 03

## தேர்தலை நடத்துவதில் அரசு விடாப்பிடி



கொழும்பு, ஏப்ரல் 3

நாடாளுமன்றத் தேர்தலை எப்படியாவது நடத்து முடித்து விடவேண்டும் என்பதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உறுதியாக இருப்பதனாலேயே, நாடாளுமன்றத் தைக் கூட்டு வதில் அவர் அக்கறை காண்பிக்க வில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. 02

## 7 நாள்களுள் 244 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் இன்னும் 7 நாள்களில் குறைந்தபட்சம் மேலும் 244 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படலாம் என்று அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்று மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார். 02

- நாடாளுமன்றத்தைக் கூட்டுவதா?
- முஸ்லிம் உடலங்களை எரிப்பதா?
- நிவாரண நிதி கிடைக்குமா?

## மகிந்த 'கப்சிப்'



கொழும்பு, ஏப். 3

அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் பல விடயங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதிலளிக்காமல் அமைதியாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. 03




## அபாய நிலைமைக்கு நகர்கிறது இலங்கை!

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் கொரோனா வைரஸை தடுப்பதற்கான நடவடிக்கைகள் உரிய வகையில் முன்னெடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் இரு வாரங்களில் அதாவது இம்மாத நடுப்பகுதிக்குள் அபாயகரமான அடுத்தடுத்த கட்டங்களுக்குச் செல்ல நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித அலுத்கே தெளிவுபடுத்துகையில்,

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் உலக சுகாதார நிறுவனத்தின் 3A

## கொரோனா தொற்று பரிசோதனை யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 3

அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தொற்று பரிசோதனை நடவடிக்கைகள் நாளையிலிருந்து யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட 3A

## கொரோனாவால் 'மவுசு' வேப்பிலை 100 ரூபா

கொழும்பு, ஏப். 3

கொழும்பில் கைபிடி அளவு வேப்பமிலைகள் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. அவற்றை 02

சௌகரியமானதும் பாதுகாப்பானதுமான டிஜிட்டல் வங்கிச்சேவை

எமது டிஜிட்டல் வங்கிச்சேவைகளினூடாக உங்களுடைய பரிவர்த்தனைகளை பாதுகாப்பான மற்றும் சௌகரியமான முறையில் மேற்கொள்ளுங்கள்.

DFCC mySPACE - தன்னியக்க வங்கிச்சேவை
DFCC Virtual Wallet - DFCC வேர்சுவல் வொலற்
DFCC iCONNECT - DFCC ஐகனெக்ட்
DFCC PAY - DFCC பே
DFCC இணைய வங்கிச்சேவை

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி உங்கள் வளர்ச்சிக்கு

# நாடாளுமன்றத்தைக் கூட்ட பின்னடிக்கும் ஆளும்தரப்பு

கொழும்பு, ஏப்.3
நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஆளுந் தரப்பு ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரியவருகின்றது.

'கொரோனா' வைரஸை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாக்கும் தேசிய வேலைத் திட்டம் மற்றும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று வியாழக்கிழமை கட்சித்தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மக்கள் விடுதலை முன்னணி உட்பட அங்கீகரிக்கப்பட்ட முக்கியமான கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். சுகாதார மற்றும் பாதுகாப்புதுறை சார் உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தில் 'கொரோனா' வைரஸை கட்டுப்படுத்துவதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பிலும், தற்போதைய நிலவரம் தொடர்பாகவும், எதிர்காலத்தில் முன்னெடுக்க ப்படவுள்ள திட்டங்கள் சம்பந்தமாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அரசின் நிவாரணத் திட்டம் மக்களுக்கு உரிய வகையில் சென்றடையவில்லை என்பதால் உரிய பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் சார்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அதற்கான யோசனைத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்வதற்காக கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு கூட்டத்தில் கலந்துகொண்ட எதிரணி உறுப்பினர்களில் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், ஜனாதிபதி செயலணி ஊடாக அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறுவதால் நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டிய தேவைப்பாடு இல்லை என்றும், கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், ஜனாதிபதி செயலணியிடமும் யோசனைகளை முன்வைக்கலாம் என்றும் ஆளுந்தரப்பில் கூறப்பட்டுள்ளது. (எ44)

## குப்பையை எரிக்கையில் கூவிப் பறந்தது ஆட்லறி

பளை, ஏப். 3
குழியில் போடப்பட்ட குப்பையை எரிக்க கூவிக் கொண்டு பறந்தது ஆட்லறி ஷெல்.

இந்தச் சம்பவம் பளை இந்திராபுரத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் கடந்த வருடம் மீளக்குடியமர்ந்த குடும்பம் வீடுகள் அமைப்பதற்கு வளவுக்குள் குழி வெட்டி மண் அகழ்ந்துள்ளனர். நான்கு குடும்பங்கள் வதியும் காணியில் சேரும் குப்பைகளை இந்தக் குழியில்போட்டு எரிப்பது வழமை.

குழியில் அதிகளவு குப்பைகள் நிறைந்து காணப்பட்டதால் அதனைத் தீயிட்டு எரித்தபோது திடீரென்று பெரிய வெடிச் சத்தத்துடன் ஆட்லறி ஷெல் கூவிக் கொண்டு பறந்தது. ஆனால் அது வீழ்ந்து வெடிக்கும் சத்தம் கேட்கவில்லை என்றும், குப்பைக்கு தீ வைத்து விட்டு சென்றதால் தமக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் அங்குள்ள குடும்பங்கள் தெரிவித்தன.

திடீரென பெரிய வெடிச்சத்தம் கேட்டதால் தாம் அதிர்ச்சி அடைந்தோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த9)

# இறக்குமதிக்கு தடை: உள்ளூர் உற்பத்திக்கு உயிர்ப்பூட்டத் திட்டம்

கொழும்பு, ஏப். 3
"மருந்து வகைகள் மற்றும் எரிபொருள் தவிர ஏனைய அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிப்பதற்கும் மட்டுப்படுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது." என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

உள்நாட்டு விவசாயம், கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையைப் பலப்படுத்துவதை அடிப்படையாகக்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை இலங்கையில் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்று நம்புகின்றோம்." என்று மேலும் தெரிவித்தார். (த44)

### இன்று...

வைக்கப்பட்டுள்ளன. பரிசோதனை முடிவுகள் இன்றைய தினம் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 20 பேரில் 10பேருக்கு மேற்கொண்ட சோதனையில், 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், சுவிஸிலிருந்து வந்த மதபோதகருடன் நெருக்கமாகப் பழகியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

### 10,039...

துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 2 ஆயிரத்து 489 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி முதல் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் குறிக்கப்பட்ட காலங்களில் நடைமுறையில் உள்ளது.

அதற்கமைவாக நாடு முழுவதும் இதுவரை 10 ஆயிரத்து 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (க)

### 151...

உயிரிழந்துள்ளனர்.

ஏனைய 127 நோயாளர்களும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 33 நோயாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் 25 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 24 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 11 பேரும், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா 4 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனையோர்களில் வெளிநாட்டவர்களும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளடங்குகின்றனர். (ஒ.5,22)

### 7 நாள்களுக்குள்...

அமெரிக்காவில் முதல் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்டு 20 நாள்களில் 23 பேருக்கே வைரஸ் பரவியிருந்தது. எனினும், தற்போது பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை லட்சத்தைத் தாண்டியுள்ளது.

அதேபோன்று இங்கிலாந்திலும் முதலாவது நோயாளி இனங்காணப்பட்டு முதல் 20நாள்களில் 69 பேருக்கே கொரோனா பரவியிருந்தது. ஆனால் தற்போது 29 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இலங்கையில் முதலாவது நோயாளி அடையாளம் காணப்பட்டு 21 நாள்களில் 150 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது இந்த நிலையில் இது தொடர்பில் வினவிய போதே வைத்தியர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

அந்த நாடுகளுடன் முழுமையாக ஒப்பிட முடியாது. ஏனெனில் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நாடுகளை விடவும் இலங்கை கூடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வைரஸ் தாக்கம் குறித்து அமெரிக்காவின் ஜோன் ஒப்கின்ஸ் பல்கலைக்கழகம் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

இதன்படி இன்னும் 7 நாள்களில் இலங்கையில் குறைந்தபட்சம் 244 புதிய கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்படலாம்.

14 நாள்களில் அத்தொகை 403 ஆக அதிகரிக்கும் .21 நாள்களில் 667 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்படலாம்.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நோயாளிகளை அடிப்படையாகக் கொண்டே இது கணிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இன்னும் அடையாளம் காணப்படாத நோயாளிகள் சமூகத்தில் இருக்கக் கூடும். அப்படியானால் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். (க44)

### இலங்கையில்...

என்றும், நிமோனியா காய்ச்சல் அதிகரித்தாலேயே இந்நிலைமை ஏற்பட்டது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த நான்கு நாள்களாக சிசிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை உயிரிழந்தவரின் பெயர், இடம் தொடர்பான விவரங்களை வெளிப்படுத்த முடியாது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (ஒ.5,22,44)

### தேர்தலை...

'88ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஜே.வி.பியின் கிளர்ச்சி இருக்கும்போதே தேர்தல்கள் இடம்பெற்றன. அதேபோன்று இப்போதும் தேர்தல்கள் நடத்தலாம்' என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவரும் நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றவருமான சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது. கூட்டம் முடிந்த பின்னர், ஜனாதிபதியின் ஆலோசகரான சரித ஹேரத், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட சிலருடன் கலந்துரையாடினார்.

இதன்போது, 1988ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெற்றது. அந்த நேரத்திலும் தேர்தல்கள் இடம்பெற்றன. மக்களின் வாக்களிப்புக் குறைவாக இருந்தது. அதேபோன்று இப்போதும் தேர்தலை நடத்தலாம். அதில் எந்தச் சிக்கலும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள அவசர நிலைமைக்குரிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டபோது, அரசிடம் இப்போது பெரும்பான்மை இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்று அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வெற்றிபெறும். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேர்தல் நடத்துவது தொடர்பான திகதியைத் தீர்மானிப்பது தேர்தல்கள் ஆணைக்குழு என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தலை நடத்த முடியாமல் இருப்பது தொடர்பில் ஜனாதிபதியின் செயலருக்கு கடிதம் அனுப்பியிருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஒ.5)

### வேப்பிலை...

உண்டால் அல்லது பானமாக அருந்தினால் கொரோனா வராது என்று கூறியே அவை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கிராண்ட்பாஸ் பகுதிகளில்தான் இந்த விற்பனை அதிகமாக இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் குறித்த வேப்பமிலைக் கட்டுகள் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. அதற்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்புக் கிடைத்ததை அடுத்து நேற்று அந்தக் கட்டுகள் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. (ம)

*நாட்டில்..*

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான பாதிப்பாக கொரோனா வைரஸ் பரவல் உருவாகியுள்ளது. உலகின் பலம்மிக்க நாடுகள், செல்வந்த நாடுகள் என அனைத்தையுமே நாசமாக்கும் விதத்தில் கொரோனா வைரஸ் பரவல் அமைந்துள்ளது.

அவ்வாறான நிலையில் எமது நாட்டிலும் அதற்கான தாக்கம் உள்ளது. எனினும், ஜனாதிபதியின் தீர்மானங்களுடன் எமது வைத்திய, பாதுகாப்புத்துறையின் உதவியுடன் நிலைமைகளைக் கையாள முடிந்துள்ளது. எனினும் எதிர்வரும் வாரங்களில் மிகவும் அச்சுறுத்தலான நிலைமை உருவாகும் என்றே சுகாதாரத்து றையினர் அறிவுறுத்தி வருகின்றனர். எனவே, அடுத்த அச்சுறுத்தல் நிலைமையைக் கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டியுள்ளது.

இரண்டாம் உலகப் போரின்போது எவ்வாறு பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு உலகையே அது மாற்றிப்போட்டதோ அதேபோன்று ஒரு நிலைமை இன்று உருவாகி வருகின்றது. இலங்கை போன்ற நாடுகளுக்கு இது பெரிய நெருக்கடியை ஏற்படுத்தும். ஆகவே, எமது கடன்கள் மற்றும் கடனுக்கான வட்டி செலுத்தல் செயற்பாடுகளில் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உலக சுகாதார நிறுவனம் ஊடாகப் பலம் வாய்ந்த நாடுகளிடம் கேட்டுக்கொள்ளும் முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

அதேபோல் சார்க் நாடுகளின் மாநாடுகளைக்கூட்டிசகலநாடுகளும்தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருளாதார மாநாட்டை நடத்தவும் வலியுறுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார் என்றார். (ஓ,5,22)

*மகிந்த...*

**நாடாளுமன்றக் கூட்டுதல்**

நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பில் எதிர்க்கட்சிகளால் நேற்றும் வலியுறுத்தப்பட்டது. அரசமைப்புக்கு அமைவாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அப்படியானால் ஜுன் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் அது நடைபெறவேண்டும். அந்த விடயம் நடக்கவேண்டுமாக இருந்தால் தேர்தல் மே மாதம் இறுதியில் 28ஆம் திகதியாவது நடக்கவேண்டும். தேர்தல் அந்தத் திகதியில் நடக்க தேர்தல் பணிகள் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதியாவது ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்குச் சாத்தியமில்லாத நிலைமை காணப்படுகின்றது.

ஜுன் மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படாவிட்டால் சட்டச் சிக்கல் எழும். அதனை விட தற்போதுள்ள காபந்து அரசின் பதவிக் காலமும் ஜுன் 2ஆம் திகதியுடன் முடிவடைந்து விடும். இதன் பின்னர் நாட்டில் அரசு இல்லாத நிலைமை எழும்.

தற்போதைய புதிய சூழலைக் கையாள்வதற்கு புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியுள்ளன. அதற்கு சட்டவாக்க சபையான நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். இந்த விடயங்களைச் சுட்டிக் காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோர் கருத்துக்களைத் தெரிவித்தனர். ரணில் விக்கிரமசிங்க இதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச எந்தப் பதிலும் அளிக்கவில்லை. ஆனால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை ஆதரிக்கும் விமல்வீரவன்ஸ, விஜயதாஸ, உதயகம்பன்பில போன்றோர் எதிர்ப்பு வெளியிட்டனர்.

**எரிப்பதா? புதைப்பதா?**

கொரோனா தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் எரிக்கப்பட்டமைக்கு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ஆட்சேபம் வெளியிட்டனர். உலக சுகாதார நிறுவனம் கூட, கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை புதைக்க முடியும் என்று அறிவித்துள்ளது. ஆனால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டுள்ளன. அதனை விட இலங்கையில் இனிமேல் கொரோனால் உயிரிழப்பவர்களின் உடல்கள் எரியூட்டப்படும் என்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இது எந்த அடிப்படையில் வெளியிடப்பட்டது என்று கேள்வி எழுப்பினர்.

இதேவேளை, அரசின் இந்த நடவடிக்கையால் கொரோனா தொற்று ஏற்பட்டு உயிரிழந்தால் தமது உடலை எரிப்பார்கள் என்ற அச்சத்தால் கொரோனா தொற்று ஏற்பட்ட முஸ்லிம்கள் அதனை வெளிப்படுத்தாமல் இருக்கும் அபாய நிலைமையும் ஏற்படும் என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு விமல் வீரவன்ச, அத்துரலிய ரத்ன தேரர், உதய கம்பன்பில போன்றோர் எதிர்ப்பு வெளியிட்டனர். இதன்போது முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா, நாங்கள் இந்த விடயம் தொடர்பில் தனியாகக் கதைப்பதற்கு கேட்பதைக் கூட எதிர்கின்றீர்களே என்று ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ஆனாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அமைதியாக இருந்தார்.


**நிவாரண நிதி கிடைக்குமா?**

தெற்கில் உள்ளூராட்சி சபைகள் ஊடாக நிவாரணங்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்தே தேர்தல்கள் ஆணைக்குழு அது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டிருந்தது. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் அதற்கு நேர் எதிர்மாறான நிலைமை காணப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு அரசும் உதவி செய்யவில்லை. உள்ளூராட்சி மன்றங்களும் அதற்கு வைத்துள்ள நிதியை செலவு செய்ய அனுமதிக்காவிடின் என்ன செய்வது என்ற விடயத்தை கூட்டமைப்பின் பேச்சாளர் நேற்றைய கூட்டத்தில் எழுப்பினார். அதற்கும் மஹிந்த பதிலளிக்கவில்லை.

இதேவேளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கொரோனா தொற்று தடுப்புக்காக அதிலிருந்து உயிர் பாதுகாப்புக்காக ஊரடங்கைப் பிறப்பித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள அன்றாட உழைப்பாளிகள் நிவாரணம் எதுவுமின்றி வாடுகின்றார்கள். அவர்கள் இப்படியேஇருந்துபட்டினிச்சாவைஎதிர்கொள்வார்களா? பட்டினியால் சாவதை விட ஊரடங்குச் சட்டத்தை மீறுவதற்கே முயற்சிப்பார்கள். எனவே அரசு அவர்களுக்கு உதவிகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (ஓ,5,22)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது பத்திரிகை விற்பனை முகவரான

**கனகசபை கந்தசாமி**

அவர்கள் நேற்று மாலை
இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைந்தோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்பதோடு அவரது
குடும்பத்தினரின் துயரில் நாமும்
பங்குகொள்கின்றோம்.

**உதயன் குழுமம்.**

# மரண அறிவித்தல்

## கனகசபை கந்தசாமி

*(பத்திரிகை விற்பனையாளர்)*



**காரைநகர், மருதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கந்தசாமி நேற்று மாலை (02.04.2020) இறைபதமடைந்தார்.**

**அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை குணவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், ஜெயந்தினி (ஆசிரியை யாழ்ற்றன் கல்லூரி), காலஞ்சென்ற ஜெயந்தசிறி மற்றும் பிரதீபன் (தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியானந்தன் (ஆசிரியர் மெய்கண்டான் வித்தியாசாலை), தமயந்தி (தாதிய உத்தியோகத்தர் காரைநகர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, திருநாவுக்கரசு, தில்லைநாதன் மற்றும் புஸ்பவதி, தேவசேனா (மாலா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோபிநாத், மோசிகன், மகீசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை (03.04.2020) 7 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

*மருதடி,*
*காரைநகர்.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தனிமைப்படுத்தப்பட்டோரை சோதனை செய்து விடுவிக்குக!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 3**

**வடக்கில் பல்வேறு காரணங்களுக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சோதனையின் பின்னரே விடுவிக்க வேண்டும். தற்போது 14 நாள்களைக் கடந்த பின்னரும், நோய் அறிகுறி எதுவும் தென்படாமல் இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே தனிமைப்படுத்தலில் இருந்தவர்களை விடுவிக்கும்போது கட்டாயம் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

வடக்கில் 346 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரியவருகின்றது. இவ்வாறு தனிமைப்படுத்தி உள்ளவர்கள் 14 நாள்களின் பின்னர் நோய் அறிகுறி தென்படாவிட்டால் சோதனை எதுவுமின்றியே விடுவிக்கப்பட்டு வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வந்து சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்களும் இவ்வாறே விடுவிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு நோய் அறிகுறிகள் தென்படாவிட்டாலும் அவர்கள் நோய்க் காவிகளாக இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இது ஆபத்தான நிலைமை.

காங்கேசன்துறையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களுக்கு தொற்றுக்குரிய எந்த அறிகுறியும் தென்படாதபோதும், கொரோனா இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வடக்கில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அனைவரையும் கொரோனா தொற்றுச் சோதனையின் பின்னரே விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள அனைவரையும் சோதனைக்கு உட்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இலங்கையில் மிகக் குறைவு என்றும் சந்தேகப்படுவர்களை கொரோனா தொற்று பரிசோதனைக்கு உட்படுத்தக் கூடிய வாய்ப்புக்களே காணப்படுவதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ஒ.5,105)

# யாழ்ப்பாண நிலைமை: அமைச்சுடன் ஆலோசனை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமை சம்பந்தமாக மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகின்றது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் இன்று அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் புதிதாக 3 நோயாளர்கள் கொரோனா தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர். அரியாலையில் அமைந்துள்ள தேவாலயத்தில் கடந்த 15ஆம் திகதி அன்று இடம்பெற்ற ஆராதனையை நடத்திய சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 20 பேரை காங்கேசன்துறையிலுள்ள ஓர் தனிமைப்படுத்தல் மையத்தில் கடந்த 23ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தி கண்காணித்து வந்தோம்.

இவர்களில் கொரோனா நோய்த்தொற்றுக்கான எந்தவொரு அறிகுறிகளும் இதுவரை தமக்கு ஏற்பட்டதாக எவராலும் அறியப்படுத்தப்படவில்லை. இருப்பினும் முதற்கட்டமாக 10 பேருக்கு கிருமி த் தொற்றுஏற்பட்டுள்ளதாஎன்பதைகண்டறியகொரோனா தொற்றுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று மாலை இவர்களில் 3 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த போதகருடன் நெருங்கிப் பழகியவர்களாவர். இவர்கள் சிகிச்சைக்காக வெலிக்கந்த கொரோனா தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மேலும், மேற்படி தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியுள்ள ஏனைய 10 பேருக்குமான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏற்கனவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த ஏனையவர்களுக்கும் இப்பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடு க்கப்படுகின்றது.

இந்நிலையில் வடமாகாணத்தில் மேற்படி ஆராதனையில் பங்குபற்றி சுயதனிமைப்படுத்தலில் தத்தமது வீடுகளில் தங்கியுள்ள 326 பேரையும் சுயதனிமைப்படுத்தல் விதிகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாமென கேட்டுக்கொள்கின்றோம்.

இவர்களில் யாருக்காவது காய்ச்சல், வறண்ட இருமல் மற்றும் தொண்டைநோ போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக உங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிப்பதுடன் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம், என்றுள்ளது. (ஒ.5)

# தேர்தல் சிக்கலுக்கு நீதிமன்றை நாடுக!

கொழும்பு, ஏப். 3

நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் திகதி தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்ப்பதற்கு உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலை பெற்றுக்கொள்வது தகுதியானது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளார். (ஒ.5)

# கொரோனா நோயாளிகளுக்கு கைகொடுக்கும் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஏப்.2

கொரோனா நோயாளிகளுக்கு செயற்கை சுவாசத்தை வழங்கக்கூடிய இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டி போதனா வைத்தியசாலையின், இருதய சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும், தாதிய அதிகாரியான, பிஹான் ஹப்புதந்திரியால், ஒரே நேரத்தில் நான்கு நோயாளிகளுக்கு சுவாசத்தை வழங்கக்கூடிய இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பலர் சுவாசிக்க முடியாமையாலேயே உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், செயற்கை சுவாசத்தை வழங்கக்கூடிய இயந்திரங்கள் இலங்கையில் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன.

செயற்கை சுவாசத்தை வழங்கக் கூடிய சுமார் 500 இயந்திரங்களே காணப்படுகின்றன. இந்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் இந்த இயந்திரத்தை தான் உருவாக்கியுள்ளதாக தாதிய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பிரதான செயற்கை சுவாசத்தை வழங்கக் கூடிய இயந்திரத்தில், இணைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள குறித்த இயந்திரத்தில் 4 பிளாஸ்ரிக் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் சம அளவான எடையைக் கொண்ட நான்கு நோயாளிகளுக்குச் சுவாசத்தை வழங்க முடியும்.

இந்த இயந்திரத்தின் செயற்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு, இயந்திரத்தை உருவாக்கிய தாதிய ஊழியரால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (க)

### அபாய...

வகைப்படுத்தலுக்கு அமைய இலங்கை தற்போது 3ஏ கட்டத்தில் காணப்படுகின்றது. இது, வீடுகளினுள் கூட்டுத் தொற்று நிலையாகும். இவ்வாறு இலங்கையில் தற்போது பல பிரதேசங்களில் வைரஸ் தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கை இதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு செல்லாமலிருப்பதற்கு தற்போதுள்ளதைவிடவும் கடுமையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அடுத்த கட்டம் கிராமம் அல்லது நகரத்தினுள் குழுக்களாக தொற்று நிலை இனங்காணுதலாகும்.

தற்போது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் இலங்கை அடுத்த கட்டத்துக்குச் செல்ல வேண்டியேற்படும். மாறாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் இதற்கு முதல் கட்டத்துக்குச் சென்று அதன் பின்னர் நோயாளர்கள் அற்ற கட்டத்துக்கும் செல்ல முடியும்.

இதில் 4 ஆவது கட்டம் மிகப் பாரதூரமானதாகும். சமூகத்தினுள் பரவும் நிலையே 4 ஆவது கட்டமாகும்.

80 வீதத்துக்கும் அதிகமாக சமூக இடைவெளியைப் பேணும் நாடுகளே வைரஸ் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் முழுமையான பயனை அடைகின்றன. சமூக இடைவெளி என்பது பாதுகாப்புக்கானபிரதான வழிமுறையாகும்' என்றார்.

இதேவேளை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்விடயங்கள் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நோயாளர்களில் 20 வீதமானோருக்கு நோய் அறிகுறிகள் வெளிப்படமாட்டா. இன்னும் 60 வீதமானோருக்கு மிகவும் எளிமையான நோய் அறிகுறிகளே வெளிப்படும். அதனால் உண்மையாகவே கொரோனா தொற்றுக்கு இலக்காகி நோயை வேறு நபர்களுக்கு பரப்பும் நோயாளர்களில் 80 வீதமானோர் மேலோட்டமான பார்வைக்கு நோயாளர்களாக இனங்காண முடியாத வகையைச் சேர்ந்தவர்களாவர். அதனை மறைந்திருந்து நோயைப் பரப்பும் வகையாக அடையாளப்படுத்தலாம்.

கொரோனாவை இனங்காணக்கூடிய பிசிஆர் பரிசோதனையின் உணர்திறன் 70 வீதமாகும். அதாவது இப் பரிசோதனைக்கு உட்படுவோரில் 30 வீதமானோர் உண்மையாக நோயைக் கொண்டிருந்த போதும் நோயாளர்களாக இனங்காணப்படமாட்டார்கள்.

அவர்களால் ஏனையோருக்கு கொரோனா வைரஸ் பரவக் கூடியதால் இந்நிலை அபாயகரமானதாகும், என்றுள்ளது. (ஒ.5,22)

### கொரோனா..

வுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

முன்னதாக இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் முதலாம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

'யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கொரோனா தொற்றுக்குரிய பரிசோதனை நாளை ஆரம்பிக்கப்படும். முதலில் சோதனை முயற்சியாக இது மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே முறைப்படியான பரிசோதனைகள் ஆரம்பமாகும். இதற்குரிய உபகரணங்கள் யாழ்ப்பாணத்தில் கைவசம் உள்ளன' என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5,105)

# தென்மராட்சிக் கழகம் உதவிகள் வழங்கல்

கொடிகாமம் ஏப்ரல் 3
தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் குழந்தைகளைக் கொண்ட, வசதி குறைந்த 48 குடும்பங்களுக்கு உதவிப் பொருள் களை முதற்கட்டமாக வழங்கியுள்ளது.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியின் கோரிக்கை யின் பேரில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட் டது.
"சம காலத்தில் உலகம் முழுவதும் இந்த நிலைமை இருப் பதால் புலம்பெயர் உறவுகள் உதவ முடியாது தவிக்கின் றனர். ஏற்கனவே எமது பொதுப் பணிகளுக்கு உதவி செய்த உறவுகள் தற்போதுள்ள இக்கட்டான நிலையில் சிக்கித் தவிக்கும் தமது மக்களுக்கு உதவ முடியாமல் தமது கவலையைத் தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் உதவி களை வழங்க எமது கழகத்தின் செயற்பாடுகளை முன் னெடுத்துச் செல்ல கழகத்திடம் பண வசதி இல்லை. சமூக அமைப்புகள், ஆலயங்கள், நலன்விரும்பிகள், கொடை யாளர்கள் ஆகிய தரப்பிடமிருந்து தென்மராட்சி அபிவி ருத்திக் கழகம் உதவிகளை எதிர்பார்த்துள்ளது.
பணமாகவோ பொருளாகவோ உதவ முடிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். உதவி செய்ய விரும்புவோர் தென் மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் சாவகச்சேரி மக்கள் வங்கி கிளையின் 100 1800 63948 என்ற வங்கிக் கணக்கு இலக்கத்துக்கு வைப்புச்செய்ய முடியும்.
மேலதிக விவரங்களுக்கு செயலாளர் என்.பாலச்சந்திரன் 0772021322, பொருளாளர் எஸ்.செந்தூரன் 077 3126447, தலைவர் கே.கந்தசாமி 0771793268 ஆகி யோருடன் தொடர்பு கொள்ள முடியும்" என்று தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் தெரிவித்துள்ளது. (த-159)

# ஊரடங்கு தளர்த்தப்படும் பகுதிகளில் இடைவெளி குறைவால் அபாயநிலை!

**கொழும்பு, ஏப். 3**
**தற்காலிகமாக ஊரடங்குச் சட்டம் அடிக்கடி தளர்த்தப்படும் பிரதேசங்களில் 50 சதவீதத்துக்குக் குறைவான சமூக இடைவெளியே காணப்படுகின் றது. இது அபாயகரமான நிலை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங் கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட களநிலை அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:
தற்போது செய்யப்பட்டுள்ள ஆய் வுகளின் அடிப்படையில் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க அனைத்து தீவிர நடவடிக்கைகள் மற்றும் உக்கிரமான தீர்வுகள் மூலம் கொரோனா நோய்ப் பர வலைத் தடுக்குமாறு உலக சுகா தார நிறுவனம் தனது அங்கத் துவ நாடுகள் அனைத்துக்கும் தீவிரமாக எச்சரித்துள்ளது. இலங்கையிலும் இந்த நடவடிக் கைகள் பின்பற்றப்பட வேண்டும்.
தற்போதைய நிலையை அவதா னிக்கையில் இலங்கையில் சமூக இடைவெளி 3 மட்டங்க ளில் காணப்படுகின்றது.
முற்றாகத் தனிப்படுத்தப்பட்ட கிரா மங்களும் நகரங்களும் 90 சதவீதத்துக்கு மேலான சமூக இடைவெளியைப் பேணுகின் றன. இது சிறப்பானதாகும்.
யாழ்ப்பாணம் உட்பட அதி அபா யகர பிரதேசங்களாகக் கருதி தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதே சங்களில் 70 சதவீதத்துக்கும் மேலான சமூக இடைவெளி காணப்படுகிறது. ஆனால் தற்கா லிகமாக அடிக்கடி ஊரடங்கு தளர்த்தப்படும் பிரதேசங்களில் இந்தச் சமூக இடைவெளி மட்டம் 50 வீதத்துக்கும் குறைவாகக் காணப்படுகிறது. இது அபாய நிலையை தோற்றுவிக்கும்.
சமூக இடைவெளியை 80 சத வீதத்துக்கு அதிகமாகப் பேணத் தேவையான செயற்பாடுகள் நாடு முழுவதும் ஒரேவிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என நாங்கள் பரிந்துரைக்கின் றோம்- என்றுள்ளது. (த-7)



## யாழ்.குடாநாட்டில் கடற்றொழில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஏப். 3
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாளாந்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ கடற்றொழில் சார் உற்பத்திகள் பெறப்பட்ட நிலையில், தற்போது 60 ஆயிரம் கிலோ உற்பத்தியே பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கையில் 210 கிலோமீற்றர் கடற்பரப்பைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும், 22 ஆயி ரம் மீனவர்கள் உள்ளனர். இவர்களின் தொழிலுக்காக 10 ஆயிரம் படகுகள் உள்ளன.
இந்த நிலையில் தற்போது கடந்த இரு வாரமாக 60 ஆயிரம் கிலோவை கடற்றொழில் உற்பத்தி எட்டாத நிலையில், மீனவர்களின் வாழ்வாதாரம் பெரும் வீழ்ச் சியடைவதாக மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்தின் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. (க-105)

## கொரோனா அச்சம்; யாழில் 325 கைதிகள் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப்.3
கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக யாழ்ப் பாணச் சிறைச்சாலையில் இருந்து நேற்றுவரை 325 கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் கார ணமாக சிறைச்சாலை திணைக்களம் ஜனாதிபதியுடன் இணைந்து சிறைகளில் உள்ள கைதிகளை நீதிமன் றங்களின் ஊடாக பிணையில் விடுதலை செய்துவரு கின்றது. சிறைச்சாலைக்குள் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் பாரிய எதிர்விளைவுகள் ஏற்படும் என்ற அச்சம் காரணமாக இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கட்டம் கட்டமாக கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்பட்டு வரு கின்றனர். இவ்வாறு நேற்று வரை 325 கைதிகள் நீதிமன்றங்கள் ஊடாக பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இன்னும் சில கைதிகளை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. விடுதலை செய்யப்படும் கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளின் பொலிஸ் பிரிவுகளில் உறவினர்களை அழைத்து நேரடியாக கையளிக்கும் நடவடிக்கையை யும் மேற்கொண்டு வருகின்றனர். (ப-20)

## 6,594 பேருக்கு தென்மராட்சியில் சமுர்த்தி கொடுப்பனவு

கொடிகாமம் ஏப். 3
அரசால் அறிவிக்கப்பட்ட அவசர கால உதவிக் கொடுப்பனவான சமுர்திக் கொடுப் பனவுகள் தென்மராட்சிப் பகுதியில் இது வரை 6, 594 பேருக்கு வழங்கப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் வாழ்வாதாரத்துக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் சமுர்த்தி குடும்பங்களுக் கான கொடுப்பனவுகள் நேற்று வியாழக் கிழமை சமுர்த்தி உத்தியோகத்தர் த.கிருபா கரனால் வழங்கப்பட்டது. ஜே/318 மீசாலை கிழக்கு பிரிவில் 198 குடும்பங்களுக்கும், ஜே/347 மந்துவில் வடக்கு பிரிவில் 79 குடும்பங்களுக்கும் நேற்றைய தினமும், முதற் கட்டமாக ஐயாயிரம் ரூபா பணமும், ஆயிரம் ரூபா உலர் உணவு பொதியும் வழங்கப்பட்டன.
அத்துடன் ஜே /316 கிராம அலுவலர் பிரிவில் 180 குடும்பங்களுக்கும், ஜே/ 347 கிராம அலுவர் பிரிவில் 79 குடும் பங்களுக்கும், ஜே/301 கிராம அலுவலர் பிரிவில் 239 குடும்பங்களுக்கும், ஜே/ 294 கிராம அலுவலர் பிரிவில் 177 குடும் பங்களுக்கும், ஜே /298 கிராம அலுவலர் பிரிவில் 93 குடும்பங்களுக்கும், ஜே /315 கிராம அலுவலர் பிரிவில் 237 குடும்பங் களுக்கும், ஜே/ 329 கிராம அலுவலர் பிரிவில் 71 குடும்பங்களுக்கும், ஜே /330 கிராம அலுவலர் பிரிவில் 95 குடும்பங்க ளுக்கும், ஜே/ 336 கிராம அலுவலர் பிரிவில் 85 குடும்பங்களுக்குமாக மொத் தம் ஆயிரத்து 256 பயனாளிகளுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உண வுப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.
உலர் உணவு பொருள்கள் கிடைத்த வுடன் ஏனைய பிரிவுகளுக்கும் சமுர்த் திக் கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ப-159)

## கல்விச் செயற்பாடுகளுக்காக விசேட செயலணி அமைப்பு

கொழும்பு, ஏப் .3
நாட்டின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் தேடிப் பார்ப்பதற்காக ஜனா திபதி விசேட செயலணி ஒன்று அமைக் கப்பட்டுள்ளது.
ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த விசேட செயலணி அமைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர் பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.
நாட்டில் கொரோனா தொற்று அதிகரித் துக் காணப்படும் இந்தச் சந்தர்ப்பத் தில் கல்வித்துறைச் செயற்பாடுகளை வீழ்ச்சியடையாது பாதுகாக்கும் நோக் கில் இந்தச் செயலணி அமைக்கப்பட் டுள்ளது. அதற்கமைய நாட்டின் ஆரம்ப கல்வி, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலை கல்வித் துறைகளின் செயற்பாடுகளை இந்த செயற்குழு முறையாக மேம்படுத்தவுள்ளது.
இதற்கு உயர்கல்வி, தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்பு அபிவிருத்தி தொழில் மற்றும் தொழிலாளர்கள் சம் பந்தமான அமைச்சின் செயலாளர் டி.எம்.ஏ.ஆர்.பி திசாநாயக்க தலை மையிலான 26 உறுப்பினர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# மருதானையில் ஒரே நாளில் 2,000 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஏப்.3

**மருதானை – ஆர்னோல்ட் ரத்னாயக்க மாவத்தையில் வசிக்கும் 2 ஆயிரம் பேர் வீடுகளில் ஒரே நாளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.**




மருதானையைச் சேர்ந்த, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்ததைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

இதன்பிரகாரம் நோயாளி வசித்த தொடர்மாடிக் குடியிருப்பு உள்ளிட்ட 18 மாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய தேவைகள் கொழும்பு மாநகர சபையூடாக வழங்கப்படும். உயிரிழந்தவரின் மகள், மருமகன் மற்றும் பேரப்பிள்ளைகள் அங்கொட தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில், தொற்று ஏற்பட்ட நோயாளிகளுடன், தொடர்புகளைப் பேணிய 308 பேர் ஏற்கனவே கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை மறு அறிவித்தல் வரை கொழும்பு நகரிலுள்ள சிறுவர் இல்லங்கள் மற்றும் வயோதிபர் இல்லங்களுக்கு வெளிநபர்களை அனுமதிக்க வேண்டாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொரோனாவின் அபாய வலயங்களில் ஒன்றான கொழும்பு மாவட்டத்தில் மாநகர சபை எல்லைக்குள் மட்டும் இதுவரை 12 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் மருதானையைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார். இவருடன் சேர்த்து இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-22)

## மறைந்திருந்த வெளிநாட்டவர்கள் நேற்றுக் கைது

கொழும்பு, ஏப். 3

மினுவாங்கொட பகுதியில் வீடொன்றில் மறைந்திருந்த 30 வெளிநாட்டு பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 29 நேபாள பிரஜைகளும், ஒரு இந்தியருமே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் உடனடியாக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வீட்டு உரிமையாளரும் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தனிமைப்படுத்தலின் பின்னர் அவர்கள் பற்றிய விசாரணைகள் நடைபெறும். வெளிநாட்டுக்கு தொழிலுக்கு செல்வதற்கு இலங்கையை இடைத்தங்கல் முகாமாக இவர்கள் பாவித்துள்ளமை தெரிய வந்துள்ளது. (ஒ.5)



## வறட்சியான வானிலை

கொழும்பு, ஏப். 3

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இன்று வறட்சியான வானிலை நிலவும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எனினும், சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பிலிருந்து காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சீரான வானிலை நிலவும்.

மன்னாரிலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் காற்று மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (து)



## செட்டிக்குளத்தில் தொற்று நீக்கம்

வவுனியா,ஏப். 3

வவுனியா, செட்டிக்குளம் வைத்தியசாலையில் கொரோனா தொற்று நீக்கும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கொரொனோ வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சுகாதாரப் பிரிவினர், விசேட அதிரடிப் படையினரின் ஏற்பாட்டில் வவுனியா, செட்டிக்குளம் வைத்தியசாலையில் தொற்றுநீக்கும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. (ப-110)

## 230 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

சரசாலை, ஏப்.3

சரசாலை, இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய அறப்பணி நிதியத்தினூடாக 230 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சரசாலை தெற்கு ஜே/ 316, சரசாலை வடக்கு ஜே /317 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன் குறித்த பகுதிகளைச் சேர்ந்த கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான விசேட போசாக்குப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஜ-159)






## வர்த்தக சங்கத்தின் முன்மாதிரி

வவுனியா,ஏப்.3

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு, வவுனியா வர்த்தக சங்கத்தால், மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மனிதர்களின் வெப்பத்தை அளவிடும் நவீன கருவிகள் நேற்று மாலை கையளிக்கப்பட்டன.

வைத்தியர் பிரசன்னாவின் வேண்டுகோளுக்கிணங்க, வவுனியா வர்த்தக சங்கத்தின் நிதியுதவில் இரண்டு கருவிகளும் கையளிக்கப்பட்டன.

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் சுஜன் சண்முகராஜா , செயலாளர் ஆறுமுகம் அம்பிகைபாலன் , உறுப்பினர்கள் இணைந்து வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.நந்தகுமாரிடம் கருவிகளைக் கையளித்தனர். (க)

# 522 பேர் விடுவிப்பு

வவுனியா,ஏப்.3

வவுனியா இராணுவ முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு விமானப் பயணிகள் 522 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனோ வைரஸ் தாக்கம் நாட்டில் இனம் காணப்பட்ட நிலையில் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் பயணிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தி பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று அரசு அறிவித்திருந்தது.

அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் பம்பைமடு இராணுவ முகாம் மற்றும் வேலங்குளம் விமானப்படைத்தளம், பெரியகட்டு இராணுவ முகாம் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கனடா, லண்டன், இத்தாலி, தென் கொரியா, ஈரான் நாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள், 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா என்ற பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த மாதம் 28 ஆம் திகதி குறித்த முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 167 பேரும், 31 ஆம் திகதி 310 பயணிகளும் விடுவிக்கப் பட்டனர்.

நேற்று 45 பேர் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு கொரோனோ தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், வதிவிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதேவளை 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

காலி,மாத்தறை,கொழும்பு, கண்டி, அளுத்கம, புத்தளம் வடக்கின் முல்லைத்தீவு, மன்னார், யாழ்பாணம், வவுனியா, கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களும், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்களும் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். (க-110)

அம்பாறையில்

# விதைப்பு தீவிரம்

அம்பாறை, ஏப். 3
ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வேளையிலும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று அரசு அறிவித்துள்ள நிலையில், அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.
அம்பாறை மாவட்டத்தின் நீர்ப்பாசனத்துக்குரிய கல்லோயா சேனநாயக்க சமுத்திரத்தில் இந்தமுறை போதியளவு தண்ணீர் தேக்கிவைக்கப்பட்டுள்ளதால் மாவட்டத்தின் சகல விவசாயப் பிரிவுகளிலும் சிறுபோகநெற்செய்கையைத் தடையின்றி மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
இதன்படி அம்பாறை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 80ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளில் இந்தமுறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.
தற்சமயம் சிறுபோகநெற்செய்கைக்கானஆரம்ப நீர்ப்பாசன நீர் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் நெல் விதைப்பு நடவடிக்கைகளை மும்முரமாக மேற்கொண்டுள்ளனர்.
எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் குறித்தசிறுபோகநெல் விதைப்பு வேலைகள் முடிவடையவேண்டுமென்று நீர்ப்பாசன, விவசாயத் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன.
இதேவேளை, குறித்தநெற்காணிகளின் குத்தகைக் கட்டணங்கள் முன்னரைவிடவும் அதிகரித்துள்ளன. ஒரு ஏக்கர் காணிக்கான குத்தகையாக 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 55 ஆயிரம் ரூபாவரை உயர்வு பெற்றுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (த-30)



வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்க

# கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் புதிய செயற்றிட்டங்கள் அறிமுகம்!

வவுனியா,ஏப்.3

**வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால், மக்களின் தற்போதைய நிலைமைகள் கருதி, பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.**

இது தொடர்பில் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
வவுனியா மாவட்ட தினக் கூலித் தொழிலாளர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தல், வவுனியா மாவட்டத்தில் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாத விவசாயிகளுக்கு விற்பனைத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் வீட்டில் உள்ள அனைவருக்கும் வீட்டுத் தோட்டம் செய்வதற்கான விதைகள் மற்றும் மரக்கறிக் கன்றுகளை மானிய விலை அடிப்படையில் வழங்குதல் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
தினக் கூலித்தொழிலாளர்கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர். அதனால் அவர்கள் வீட்டில் இருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்ள கூடிய சந்தர்ப்பம் ஒன்றை V4U அமைப்பினர் ஆரம்பித்துள்ளனர்.
தினக் கூலித்தொழிலாளர்கள் தங்களது வீட்டுடன் இருக்கும் காணிகளில் பயிர்செய்வதற்குத் தேவையான விதைகளை அவர்கள் வழங்குவார்கள். அத்துடன் ஒரு நாளைக்கு 500 ரூபா அடிப்படையில் வாரத்துக்கு 4 நாள்கள் எனும் ரீதியில் 2 வாரத்துக்கு உங்களுடைய காணிகளில் நீங்கள் பயிர்செய்வதற்கு உங்களுக்குச் சம்பளம் தருவார்கள்.
இரண்டாம் வாரமளவில் அவர்களுடைய தன்னார்வத் தொண்டர்கள் உங்களுடைய காணியைப் பார்வையிட்டு நீங்கள் சிறப்பாகப் பயிர்செய்தால் உங்களுடைய அறுவடையை விற்பனையின் போதான கொள்வனவு விலையில் கொள்வனவு செய்வதற்குரிய உத்தரவாதத்தை தந்து உங்களுக்கு தேவையெனின் முற்பணத்தையும் வழங்குவர். நீங்கள் சிறப்பாக பயிர் செய்யாது விடின் 2 ஆம் வாரத்தின் பின்னர் எதனையும் வழங்க மாட்டார்கள். நேரடியாக அவர்களைத் தொடர்பு கொள்ள 0776970294 எனும் இலக்கத்தை அழைக்கவும். அல்லது துரித எண் 0242225511 அழைத்து தங்களது தகவல்களை வழங்க முடியும்.
விவசாயிகள் தங்களது பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படின், அவர்கள் எமது துரித எண் 0242225511 இனை அழைத்து (காலை 9 தொடக்கம் 4 மணிவரை) விபரங்களை வழங்கவும். மொத்த கொள்வனவாளர்களுடன் விற்பதற்கான இணைப்பு ஏற்படுத்தித் தரப்படும்.
வீட்டில் இருக்கும் காலப் பகுதியில் வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் முகமாகவும் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் முகமாவும் விவசாய அமைச்சினால் வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் இணைந்து மேற்கொள்ளும் செயற்றிட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களமும் இணைந்துள்ளனர்.
வீட்டுத் தோட்டத்துக்கான விதைகள் மற்றும் மரக்கறி கன்றுகளை மானிய அடிப்படையில் வழங்கும் செயற்பாடு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படும். வவுனியா நகர சபைக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகள் மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் அதிகம் வாழும் கிராமங்கள் முதற்கட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 0242221053 தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும். என்றுள்ளது. (க-222)

# திருகோணமலைக்கு விசேட கொடுப்பனவுகள்

மாவட்டச் செயலர் அறிவிப்பு

திருகோணமலை, ஏப்.03
ஜனாதிபதியால் மக்களுக்கு அறிவிக்கப்பட்ட விசேட கொடுப்பனவு உதவிகள் திருகோணமலை மாவட்டத்துக்கும் கிடைத்துள்ளது என்று திருகோணமலை மாவட்டச் செயலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.
இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
கொரோனா வைரஸ் தாக்கத்தால், ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்பவும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் அதன் ஓர் அங்கமாக ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட விசேட கொடுப்பனவுக்கான நிதி ஒதுக்கீடு ஏப்ரல் மாதத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.
அதன்படி திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் சேர்ந்த காத்திருப்போர் பட்டியல்களில் உள்ள சிறுநீரக நோயாளர்கள் 289 பேர், விசேட தேவையுடையோர்



1ஆயிரத்து 180 பேர், 70வயதுக்கு மேற்பட்ட குறை வருமானம் கொண்ட முதியோர் ஆயிரத்து 637 பேர், ஏற்கனவே பட்டியல் படுத்தப்பட்டு மாதாந்தம் 2000 ரூபாவை முதியோர் கொடுப்பனவாக பெற்றுவரும் பயனாளிகள் 6ஆயிரத்து 964 பேருமாக மொத்தம் 10ஆயிரத்து 70 பயனாளிகளுக்கான நிதி கிடைத்துள்ளது.
இக்கொடுப்பனவுகள் யாவும் எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிக்குள் உரிய பயனாளிகளுக்கு உரிய பிரதேச செயலாளர்களால், பொருத்தமான பொறிமுறை மூலம் வழங்கப்படவுள்ளது -என்றார். (ப-40)

# நிதி நிறுவனங்களால் மக்களுக்கு நெருக்கீடு

கடனை மீளச்செலுத்துமாறு நச்சரிப்பு

கிளிநொச்சி,ஏப்.3
கிளிநொச்சி மாவட்டத்தில் சில நிதி நிறுவனங்கள் தாங்கள் வழங்கிய நுண்கடன் உள்ளிட்ட கடன்களைத் தற்போதும் அறவிட்டு வருகின்றன. கடனின் தவணைப் பணத்தை செலுத்துமாறு நிறுவனங்கள் வற்புறுத்துவதாகவும் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக அனைத்துத் துறைகளும் முடங்கியுள்ள நிலையில், பொருளாதார ரீதியாகப் பொது மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.
எனினும் நிதி நிறுவனங்கள் பொது மக்கள் பெற்ற கடன் தவணைப்பணத்தைச்செலுத்துமாறு வற்புறுத்துவது வேதனையான விடயம். அரசின் அறிவித்தலை உதாசீனம் செய்கின்ற செயல் என்றும் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்று தன்னிடம் கடன் பெற்றவர்களைத் தொடர்பு கொண்டு தவணைப் பணத்தை உடனடியாகச் செலுத்துமாறு கடும் தொனியில் அறிவித்துள்ளது.
இதன் போது பொது மக்கள் "அரசு கடன்களைத் தற்போது அறிவிட வேண்டாம் என்று அறிவித்துள்ளது. நாங்களும் தொழிலின்றி இருகின்றோம் எனத் தெரிவித்த போதும், அரசு சொல்லியா நாங்கள் உங்களுக்கு கடன் வழங்கினோம்?" எனப் பதிலளித்த நிதி நிறுவன ஊழியர்கள், "கடன் தவணைப் பணத்தை செலுத்தாது விடின் மேலதிக கட்டணங்கள் அறிவிடப்படும்" என்று எச்சரித்துள்ளனர்.
இதனால் சிலர் நேற்று முன்தினம் குறித்த நிதி நிறுவனத்துக்குச் சென்று தங்களின் கடன் தவணைப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.
அத்தோடு வேறு சில நிதி நிறுவனங்கள் தொலைபேசி ஊடாக கடன் பெற்றவர்களிடம் தொடர்பு கொண்டு, கடனை மீளச் செலுத்துமாறு வலியுறுத்தி வருவதாகவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-214)



# கொரோனா! வீடுகளிலிருந்து வீதிக்குப் பரவுகிறது!!!

உலக சுகாதார நிறுவனத்தின் வகைப்படுத்தலுக்கு அமைய, கொரோனா நோய்ப் பரம்பல் இலங்கையில் வீடுகளினுள் கூட்டுத் தொற்று நிலையிலிருந்து கிராமத்தில் அல்லது நகரத்தினுள் குழுக்களாக தொற்று நிலை அல்லது சமூகத்தினுள் பரவும் அபாயம் தற்போது உருவாகியுள்ளது.
தற்போது செய்யப்பட்டுள்ள ஆய்வுகளின் அடிப்படையில் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க அனைத்து தீவிர நடவடிக்கைகள் மற்றும் உக்கிரமான தீர்வுகள் மூலம் கொரோனா நோய்ப் பரவலைத் தடுக்குமாறு உலக சுகாதார நிறுவனம் தனது அங்கத்துவ நாடுகள் அனைத்துக்கும் தீவிரமாக எச்சரித்துள்ளது. இலங்கையினுள்ளும் அவ்வாறு முன்னெடுக்கக் கூடிய படிமுறைகள் பலவுள்ளன. அதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.
1. 80 சதவீதத்துக்கு மேற்பட்ட சமூக இடைவெளியை உறுதிசெய்தல். தற்போதைய நிலையை அவதானிக்கையில் இலங்கையில் சமூக இடைவெளி 3 மட்டங்களில் காணப்படுகின்றது.
முற்றாகத் தனிப்படுத்தப்பட்ட கிராமங்களும் நகரங்களும் 90 சதவீதத்துக்கு மேலான சமூக இடைவெளி (மிக மகிழ்ச்சிக்குரியது)
அதி அபாயகர பிரதேசங்களாகக் கருதி தொடர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள் 70 சதவீதத்துக்கும் மேலான சமூக இடைவெளி (மகிழ்ச்சிக்குரியது).
தற்காலிகமாக ஊரடங்குச் சட்டம் அடிக்கடி நீக்கப்படும் பிரதேசங்கள் 50 சதவீதத்திற்குக் குறைவான சமூக இடைவெளி (மிகவும் நலிவான, அபாயகரமான நிலை)
சமூக இடைவெளியை 80 சதவீதத்திற்கு அதிகமாகப் பேணத் தேவையான செயற்பாடுகள் நாடு முழுவதும் ஒரே விதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என நாங்கள் பரிந்துரைக்கின்றோம். அதற்காக,

- சகல பிரசைகளும் இயன்றவரை தத்தமது வீடுகளிலேயே இருக்கவேண்டியதன் அவசியத்தை நித்தமும் வலியுறுத்துதல்.
- வங்கி நடவடிக்கைகள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை வீடுகளுக்கு அருகாமையிலேயே வழங்கத்தக்க ஒரு செய்முறையை வலுப்படுத்தல்.
- அடிக்கடி ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தும் முறையை உடனடியாக நிறுத்துதல்.
- மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தை இயன்றளவு குறைத்தல்.
- நாடு முழுதும் நோயினைப் பரப்பக்கூடிய விதத்தில் மக்கள் ஒன்றுகூடும் அதி அபாயகரமான இடங்களைப் பற்றித் தீவிரமான முடிவுகளை எடுத்தல்.

உதாரணம்: பொருளாதார விற்பனை மையம் (தம்புள்ள) மீன்பிடித் துறைமுகங்கள்.
2. நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தனிநபர் சுத்தம் பற்றி மக்கள் தொடர் அவதானத்தைச் செலுத்துதல். (உதாரணம் முறையாகக் கை கழுவுதல்)
இதற்கு மேலதிகமாக பொது மக்கள் முகக்கவசம் அணிதல் தொடர்பாக சுகாதார அமைச்சின் தற்போதைய அறிவுரைகளை மீளாய்வு செய்து பார்க்கவேண்டிய தருணம் வந்துகொண்டிருப்பதாக மருத்துவ சங்கம் வலியுறுத்துகின்றது.
பொது மக்கள் சரியான முறையில் முகக்கவசம் அணிவதன் மூலம் தற்போது இலங்கையில் வீடு களிலிருந்து கிராமங்களுக்கு அல்லது நகரங்களுக்கு பரவுவதைத் தவிர்க்கலாம் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
3. மருத்துவமனைத் தொகுதியின் கொள்ளளவை அதிகரித்தல். எதிர்காலத்தில் சமூகத்தினுள் நோய் பரவும் நிலை ஏற்படின் அதனை எதிர்கொள்வதற்கு மருத்துவமனைகளின் பௌதீக மற்றும் மனித வளங்களை அதிகரித்துக் கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும்.

**பௌதீக வளங்கள்**
தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் வேண்டும். இதற்கான விவரமான உத்தேசம் சுகாதார அதிகாரிகளுக்குக் கையளிக்கப்பட்டு இருப்பினும் இன்னமும் அதற்கான உரிய பதில் கிடைக்கவில்லை. உலகம் முழுதும் உள்ள அனுபவத்தை ஆராய்கையில் நோய்ச் சிகிச்சைச் சேவையைத் திறனாக வழங்குவதற்கு கொரோனா நோய்க்கான விசேட மருத்துவமனைகளை உருவாக்குதலின் அவசியம் உணரப்படுகின்றது. இப்போதும் அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட சில மருத்துவமனைகள் இருப்பினும் அதி தொற்று நிலையில்





அவற்றின் கொள்ளளவு எவ்விதத்திலும் போதுமாக இராது. அதனால் அதற்கு மிகவும் பொருத்தமான மருத்துவமனையாக கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழக மருத்துவமனையை நாங்கள் பரிந்துரைக்கின்றோம்.

**மனித வளங்கள்**
மனிதவளக் கொள்ளளவை உயர்வாகப் பேண வேண்டும். மருத்துவர்கள் உட்பட சுகாதார சேவைப் பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டியவரின் அல்லது அவர்களுக்கு நோய்த் தொற்றின் மனிதவளம் அசாதாரணமான முறையில் குறையும்.
அதனால் சுகாதார சேவையாளர்களுக்கு தனிமனித பாதுகாப்பு அங்கிகளை தொடர்ச்சியாக விநியோகித்தல் மிகவும் அவசியம். கடந்த சில நாள்களில் சில நோயாளர்கள் உண்மையை மறைத்ததால் மிகவும் துரதிர்ஷ்டவசமாக 4 மருத்துவமனைகளில் மருத்துவர்கள் உட்பட பெருமளவு சுகாதார சேவையாளர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி, சில நோயாளர் விடுதிகளை முற்றாக மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நோயாளர்கள் மருத்துவமனைக்கு வருகையில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான சுகாதார சேவையாளர்களில் பெரும் பற்றாக்குறை ஏற்படும்.
4. நோயாளர்களுடன் கிட்டிய தொடர்பை (தொடுகையை) பேணியோரை இனங்கண்டு அவர்களைத் தனிமைப்படுத்துதல்.
கிட்டிய தொடர்பை (தொடுகையை) பேணியோரில் குறைந்தபட்சம் 80 சதவீதத்துக்கு மேலானோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படல் எதிர்காலத்தில் நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகும்.
5. கொரோனா நோயாளர்களை இனங்காணும் பரிசோதனை வசதிகளை அதிகரித்தல்.
கொரோனா நோயாளர்களில் 80 சதவீதமானோர் எளிய நோய்க் குணங்குறிகளை மட்டுமே கொண்டிருப்பர். ஆகவே தொடர்பாளர்களை இனங்கண்டாலும் நோயாளர்களை இனங்காணத் தவறுவதற்கு இடமுண்டு. அதேபோல் இனங்காணப்பட்ட சகல தொடர்பாளர்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை.
பிறபொருளெதிரியைக் கண்டறியும் பரிசோதனை மூலம் குறுகிய நேரத்தில் (15 நிமிடங்கள்) நோயாளரை இனங்காணும் பரிசோதனை முறைமைகள் சில தற்போது பல நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த முறைமைகளை எமது நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் வழிமுறைகளை உடனடியாகத் தேடியறிய வேண்டும்.
உலக சுகாதார நிறுவனமும் தற்போது பரிந்துரை செய்துள்ளதன்படி நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் சகலரையும் பரிசோதனைக்கு உட்படுத்தி நோய் இனங்காணப்படும் சகலரையும் தனிமைப்படுத்துதல் ஆனது நோயின் பரவலைக் கட்டுப்படுத்த அத்தியாவசியமாகும். அதனால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையில் ஒன்றுகூடும் தொழினுட்ப செயற்குழுக் கூட்டத்தில் தற்போதும் பல நாடுகளில் பயன்படுத்தப்படும் பரிசோதனைகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்த முடியுமா என்பதைக் கலந்துரையாட எதிர்பார்க்கின்றோம்.
6. நோய்ச் சிகிச்சைக்கான விசேட மருந்துகளை இனங்காணல்.
உலகம் முழுதும் இது தொடர்பான பல்வேறு ஆய்வுகள் நடந்து கொண்டு இருக்கின்றன.
சுகாதார அமைச்சின் தொழினுட்ப செயற்குழு மற்றும் ஜனாதிபதி செயலணியின் ஆய்வுக் குழுக்கள் தற்போது இது தொடர்பாக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இலங்கைக்குள் ஐதரொக்சி குளோரொக்குயின் மருந்தின் பாவனை தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நோய்ச் சிகிச்சை முறையாக Avigan என்ற பெயருடைய வைரஸ் எதிரி மருந்தின் பாவனை பற்றி ஜப்பானில் பேசப்பட்டாலும் அது கொரோனா நோய்க்கு சிகிச்சையளிக்கப் பொருத்தமற்றது என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.
7. விமான நிலையங்களையும் துறைமுகங்களையும் மூடியதன் மூலம், உலகளாவிய தொற்றுநோய் நிலையின் கீழ் புதிய நோயாளர்கள் வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருவது தடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய உலகளாவிய தொற்றுநோய் நிலை கட்டுப்பாட்டுக்கு வரும்வரை விமான நிலையங்களையும் துறை முகங்களையும் எவ்விதத்திலும் திறக்கக் கூடாது என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

**ஏப்ரலில் அறியப்படலாம்**
தொற்றுநோய் விஞ்ஞான எதிர்வுகூறலின் படி இலங்கையில் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மத்தியிலும் நோயாளர்கள் உயர்ந்தபட்சமாக அறியப்படல் ஏப்ரல் மாத இறுதி வரை நடைபெறலாம்.
மருத்துவமனைகளின் கொள்ளளவின் உயர் எல்லையைத் தாண்டாமல் கொவிட்19 நோயை நாட்டினுள் கட்டுப்படுத்துவதற்கு மேலே எங்களால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் மேலும் தாமதமின்றிச் செயற்படுத்தப்படுவது மிகவும் அவசியம்.

*இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.*

# மக்களின் போதிய ஒத்துழைப்பால் மன்னாரில் கொரோனா இல்லை!

## மன்னார் சுகாதாரப் பணிப்பாளர் பெருமிதம்



**தலைமன்னார், ஏப். 3**

**சமூக இடைவெளி, பாதுகாப்பான சுகாதார விடயங்களில் தொடர்ந்து கவனம் செலுத்துதல் போன்ற நோய்த் தடுப்பு அறிவுரைகளை மன்னார் மக்கள் மூன்று வாரங்களாகப் பின்பற்றுகின்றனர். அதனால் மன்னாரில் கொரோனாவால் எவரும் பாதிக்கப்படவில்லை.**

இவ்வாறு, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொனோரா வைரஸ் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஒரு சிலர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டாலும் அவர்கள் கொரோனா நோய்க்கு உள்ளாகவில்லை என்று பரிசோதனையின் பின்னர் எமக்கு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நோய்த் தடுப்புப் பற்றிய அறிவுறுத்தல்களை மன்னார் மக்கள் தொடர்ந்து பின்பற்றி வருவார்களானால் தொற்று நோய்க்கு மன்னார் மக்கள் தப்பித்துக் கொள்ளமுடியும்.

யாராவது வெளியிடங்களிலிருந்து வருகை தந்திருந்தாலும் தொற்று நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் எங்களுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்துங்கள். நாங்கள் வந்து நடவடிக்கை எடுப்போம்.

ஆனால் இவைகளை மறைத்து வைத்திருந்து இறுதி நேரத்தில் தெரியவரும் பட்சத்தில் குடும்பங்களுக்கோ அல்லது சமூகத்துக்கு ஏற்படும் விளைவு பாரதூரமாக இருக்கும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகின்ற போது, மக்கள் பிரயாணம் செய்கின்ற போது, கடைகளில் பொருள்கள் கொள்முதல் செய்யும்போது சமூக இடைவெளியைக் கட்டாயம் கவனித்துச் செயற்படுங்கள்.

மன்னார் மாவட்டத்தில் சகல மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் தயார் நிலையில் இருக்கின்றார்கள். வெளி நோயாளர் பிரிவுக்கு வந்து அவசியம் நோய்க்கு சிகிச்சை பெற வேண்டும் என்று கருதினால் மட்டும் வந்து செல்லலாம். கிளினிக் நோயாளர்களுக்கு பிரதேச மருத்துவமனையை அண்மித்த பகுதிகளுக்குச் சென்று மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட மருத்துவமனைப் பகுதிகளில் தபால் திணைக்கள உதவியுடன் மருந்துகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தனியார் பகுதிகளில் மருந்துகள் பெற வேண்டுமானால் மன்னார் மாவட்டத்தில் ஐந்து மருந்தகங்கள் அடையாளம் காணப்பட்டு பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்தகங்களுடன் தொடர்பு கொள்ளும்போது இவர்கள் வீடுகளிலேயே வந்து விநியோகிப்பர். இதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த மருந்தகங்களின் தொலைபேசி இலக்கங்களை சுகாதார இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். இது கடினமாக இருந்தால் அருகிலுள்ள பொதுச் சுகாதார அலுவலர்களுடன் தொடர்பு கொண்டால் அவர்கள் உதவி புரிவர்"என்று மேலும் தெரிவித்தார்.

(த-60)

## ஊரடங்கால் மக்கள் வீட்டுத் தோட்டத்தில் !

மன்னார்,ஏப்.3

வீட்டுத் தோட்டத்தின் முக்கியத்தை கொரோனாவால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உணர்த்தியுள்ளது என்று மன்னார் மாவட்ட வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பெருநிலப்பரப்பாக உள்ள மடு, நானாட்டான், மாந்தை முசலி போன்ற பிரதேசங்களில் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் வியாபார நோக்கத்தோடும், உணவுத் தேவைக்காகவும் பலர் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் ஒரு சிலரை நேரடியாகச் சந்தித்த போது அவர்கள் தெரிவித்ததாவது,

மன்னார் மாவட்டம் வேகமாக வறட்சி நிலையை அடையும் பிரதேசமாக இருப்பதால் இங்குள்ள மக்கள் தோட்டப்பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டுவதில்லை.

எனினும் ஊரடங்களால் முடங்கியுள்ள நாம், விவசாயம் மட்டுமே எப்போதும் கை கொடுக்கும் என்பதை உணர்ந்துள்ளோம்.

ஊரடங்குச் சட்டத்தால் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மரக்கறிகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

எனினும் நாங்கள் நஞ்சற்ற புதிய மரக்கறிகளைச் சாப்பிடுகிறோம். எமது தேவைகளுக்கு மிஞ்சியதை சந்தைகளில் விற்பனை செய்கிறோம். என்றனர்.

பல இடங்களில் வீட்டுத் தோட்டத்தில் முருங்கை, வாழை, பயிற்றை, புடலங்காய், கறிமிளகாய், கீரை உள்ளிட்டவை அதிகளவு பயிரிடப்பட்டுள்ளன.(க-213)



மதபோதகருக்கு கொரோனா

## மானிப்பாய் பகுதியில் கிருமி நீக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் மதபோதகர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பதாக நேற்று முன்தினம் இரவு உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அப்பகுதியில் கிருமி நீக்கும் செயற்பாடு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் உள்ள எட்டு குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களின் வீடுகளுக்கும், மானிப்பாய் பகுதியில் உள்ள வங்கிகள்,சந்தைகள் போன்ற பொது இடங்களிலும் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இப்பணிகளில் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ. ஜெபநேசன், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். (ஐ-7)

## 'டிமிக்கி' கொடுத்த இருவர் தனிமையில்!

கொழும்பு, ஏப். 3

'கொரோனா' வைரஸ் பரவக்கூடிய அபாய வலயத்திலிருந்து தலவாக்கலைக்கு வந்து எந்தவொரு தகவலையும் வழங்காமல் ஒளிந்திருந்த இருவர் பிடிக்கப்பட்டனர்.

அவர்கள்பிடிபட்ட வீட்டுக்குள்ளேயே நேற்று முதல் அவர்கள் 14 நாள்களுக்கு சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புத்தளத்தைச் சேர்ந்த ஒருவரும், கொழும்பில் தொழில் புரியும் மற்றொருவருமே தலவாக்கலை ஹேமசந்திர மாவத்தையில் ஒளிந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மற்றும் சுகாதாரப் பரிசோதனை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே அவர்கள் கண்டறியப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் தொழில் புரிந்த நபரின் வீடு ஹேமசந்திர மாவத்தையிலேயே அமைந்துள்ளது. இதனால் தன்னுடன் பணிபுரிந்த புத்தளத்தைச் சேர்ந்த நபரையும் அழைத்துக்கொண்டே அவர் இந்தப் பகுதிக்கு வந்துள்ளார்.

தலவாக்கலை லிந்துலை நகரசபைக்குட்பட்ட பகுதியில் இதுவரையில் 7 பேர் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (த-44)



## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

திருகோணமலை பிராந்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

கிண்ணியா ரஹ்மானியா பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 100 மில்லிக்கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசாரணையின் பின்னர் நீதிவானிடம் அவர் முற்படுத்தப்படுவார் என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். (த-114)

# கொரோனாவை ஒழிக்க ஆயுள்வேத மருந்து!

கொழும்பு,ஏப்.03

வைரஸ் தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுள்வேத மருந்துகளைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஆயுள்வேத மருத்துவச் சபை தெரிவித்துள்ளது.

சீனாவில் தொடங்கிய கொரோனா வைரஸ் அங்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும், தற்போது உலக நாடுகளை அச்சுறுத்தி வருகின்றது.

இலங்கையிலும் நாளுக்கு நாள் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இந்த வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறவும், விஷங்களை முறியடிக்கும் ஆற்றல் கொண்டதுமான ஆயுள்வேத மருந்துகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஆயுள்வேத மருத்துவச் சபை தெரிவித்துள்ளது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், கோவிட் 19 போன்ற வைரஸ் தொற்றிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குமான ஆயுள்வேத பானம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று ஆயுள்வேத மருத்துவ சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (சு)

## கொரோனா காலத்தில் பெருகியது கசிப்பு!

கொரோனாவால் கசிப்பு உற்பத்தி யாழ்ப்பாணத்தில் மீண்டும் அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது மதுபானசாலைகள் மூடப்பட்டிருப்பதால், கசிப்பு உற்பத்தியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். மறைவிடங்களில் விற்பனையும் அமோகமாக நடைபெற்று வருகிறது.

கொரோனா தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால், பொலிஸாரின் கண்காணிப்பு வீதிகளில் அதிகமாக உள்ளது. ஆயினும் கிராமப் புறங்களில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-17)



பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் அத்தே கலகொட ஞானசார தேரர், பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொருள்களை வழங்கியுள்ளார். (சு-22)

## இலங்கையருக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, ஏப்.3

லெபனானில் சட்ட விரோதமாகத் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு நிபந்தனையின்றி பொது மன்னிப்புக் காலத்தை வழங்க அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லெபனானில் பணிபுரிவதற்கான எவ்வித சட்ட ஆவணங்களும் இல்லாத இலங்கையர்கள், இந்தப் பொது மன்னிப்புக் காலத்தில் இலங்கைக்குச் செல்வதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்று லெபனான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொதுமன்னிப்புக் காலத்தை கவனத்தில் எடுக்காத ஆண்களுக்கு 4 இலட்சம் லெபனான் லீராவும், பெண்களுக்கு 3 இலட்சம் லீராவும் அறவிடப்படும் என்று லெபனான் அரசாங்கம் அறிவித்துள்ளது. (சு-114)

## நிதி சேகரிப்பு தொடர்பில் அவதானமாக இருங்கள்

### ஜனாதிபதி செயலகம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 3

கோவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு எனக் கூறி நிதி சேகரிக்கும் சில நிகழ்வுகள் குறித்த தகவல்கள் ஜனாதிபதி அலுவலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. நிதியத்துக்கு நேரடியாக பணம் மூலமாகவோ காசோலைகள் மூலமோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேறு வழிகளின் ஊடாக பங்களிப்பதை தவிர வேறு எவருக்கும் அல்லது எந்தவொரு நிறுவனத்துக்கும் நிதியை வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதியின் செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்களின் உணவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள், சேவைகள் உற்பத்தி, விநியோகம் சுகாதார அதிகாரிகளினதும் தேர்தல் ஆணைக்குழுவின் சட்டதிட்டங்கள், அறிவுரைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய மோசடி நடவடிக்கைகள் குறித்து அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடுகளைத் தெரிவிக்குமாறு ஜனாதிபதியின் செயலர் அறிவித்துள்ளார்.

வங்கிக்கு நேரடியாகச் செய்யப்பட்ட வைப்புகளுடன் நேற்று வரை நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகை 314.5 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. (ஒ,5)

## மருதானை நபரின் சடலமும் தகனம்

கொழும்பு மருதானையில் கொரோனா வைரஸால் பீடிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தவரின் சடலமும் நேற்று மின்சாரத்தில் தகனம் செய்யப்பட்டது.

கொழும்பு - கொட்டிகாவத்தையில் உள்ள பொது மயானத்திலேயே குறித்த சடலம் தகனம் செய்யப்பட்டது. ஏற்கனவே நீர்கொழும்பில் கொரோனாவினால் உயிரிழந்த முஸ்லிம் நபரின் சடலமும் தகனம் செய்யப்பட்டது. அதற்கு கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது இன்னுமொரு முஸ்லிம் நபரின் சடலமும் தகனம் செய்யப்பட்டுள்ளது. இது கடும்விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## போலித் தகவல்: பல்கலைக் கழக மாணவனும் கைது

கொழும்பு, ஏப். 3

கொரோனா வைரஸ் தொடர்பில் சமூக வலைத்தளங்கள் ஊடாக போலித் தகவல்களைப் பரப்பிய பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். கைது செய்யப்பட்டுள்ளவர்கள் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். பல்கலைக்கழக மாணவர், பேராதெனிய பல்கலைக்கழகத்தின் இறுதி வருட மாணவர் எனவும், இராணுவப் பல்கலைக்கழகம் கொரோனா நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என சமூக வலைத்தளத்தில் போலித் தகவலை அவர் பரப்பினார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஒ,5,22)

முல்லை.மாவட்ட

## விவசாயிகளுக்கு மானிய உரம்

முல்லைத்தீவு,ஏப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட அனைத்து விவசாயிகளுக்கும் மானிய உரம் வழங்கப்படும் என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளுக்கான உர வகைகள் கமநல சேவை திணைக்களங்கள் ஊடாக வழங்கிவைக்கப்பட்ட போதும் ஒரு சில கமநல சேவை திணைக்களங்களில் உர வகைகள் முடிவடைந்துள்ளன. நாளை உரம் ஏற்றப்பட்ட பார ஊர்திகள் வந்தவுடன் அனைத்து விவசாயிகளுக்கும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார். (ஐ-19)

## மரணத்தை விற்காதீர்!

கொழும்பு,ஏப்.3

தற்போதுள்ள அசாதாரண சூழலில் வியாபாரத் தலங்களின் உரிமையாளர்கள் உயிர்க்கொல்லியான சிகரெட்டுக்களை விற்பனை செய்ய வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

சிகரெட் கொரோனா வைரஸ் மரணங்களுடன் தொடர்புள்ளதாக உள்ளது. அது விற்பனை செய்வது மரணத்தை விற்பனை செய்வது போன்றது. எனவே அதனை விற்பனை செய்வதில் இருந்து விலகியிருக்குமாறு அவர் வர்த்தகர்களைக் கேட்டுள்ளார்.

"இந்த விடயத்தில் வர்த்தகர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். புகைப்பிடிப்பவர்களுக்கு ஏனையவர்களை விட, கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே புகைப்பிடிப்பவர்களும் அதனை உடனடியாக கைவிடவேண்டும். இதன் மூலம் உங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு)

## குருநாகலில் 16 பேர் சுயதனிமை

குருநாகல், ஏப்.3
குருநாகல் மாவட்டத்தின் கட்டுபொத்த கெக்குணகொல்ல கிராமத்தில் கொரோனா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில், தொற்றுக்குள்ளான பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட16 பேர், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
குறித்த பகுதிக்குள் எவரும் பிரவேசிக்கவோ அங்கிருந்து வெளியேறவோ முடியாமல் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-114)

# மற்றவர்களின் பாதுகாப்புக்காக நாங்கள் தனித்திருப்போம்

### மன்னார் ஆயர் வேண்டுகோள்

மன்னார்,ஏப்.3

**எமது பாதுகாப்பையும், மற்றவர்களுடைய பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு நாங்கள் வீடுகளில் தனித்திருப்போம். அதுவே நாம் நாட்டுக்குச் செய்யும் பெரும் உதவி இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று நடத்தப்பட்டஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஊரடங்குச் சட்டம் ஊடாகவும், அறிவுறுத்தல்கள் வழியாகவும் வீட்டில் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அதற்கு நாம் ஒத்துழைப்புக் கொடுப்போம். நாங்கள் தனித்திருப்பதும், எங்களை நாங்கள் பாதுகாப்புடன் வைத்திருப்பதும் மிகவும் அவசியமாக உள்ளது.
ஒருவருடைய தவறால், பல நபர்களுக்குத் தொற்றக் கூடிய ஒரு நோய் இது. மக்களுக்காகவும், எம்மைச் சூழ்ந்து இருப்பவர்களுக்காகவும் நாம் தனித்திருப்பது காலத்தின் அவசியம்.
கத்தோலிக்கர்கள் கோயிலுக்குச் சென்று புனித வார வழிபாடுகளில் கலந்து கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றீர்கள். ஆனால் தொலைக்காட்சி, இணையத்தளங்கள் ஊடாக உங்களுக்குக் கிடைக்கக்கூடிய வழிபாடுகளுடன் இணைந்து கொள்ளுங்கள். இறைவனை மன்றாடுங்கள்.
மன்னார் மறை மாவட்டத்தில் புனித செபஸ்தியார் பேராலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருப்பாடுகளின் ஞாயிறு மற்றும் புனித வாரத்தின் ஞாயிறு தினத்தில் காலை 7 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மேலும் ஒரு தினத்தில் மடு அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு உங்கள் அனைவருக்காகவும் செபிப்போம்- என்றார். (க-56)

## பரீட்சைகள் ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.3
வட இலங்கைச் சங்கீத சபையால் எதிர்வரும் மே, ஜுன் மாதங்களில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த அனைத்துப் பரீட்சைகளும், தரம் 5 மற்றும் தரம் 6 பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு என எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த கருத்தரங்குகளும் பிற்போடப்படுகின்றன என்று வட இலங்கைச் சங்கீத சபை அறிவித்துள்ளது.
பாடசாலைகள் செயற்படத் தொடங்கியதும் அந்தத் திகதியில் இருந்து இரு மாதங்கள் முடிவடையும் வகையில் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் தீர்மானிக்கப்பட்டு உரியவாறு பத்திரிகைகளில் தெரியப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## உணவு, மருந்து பொருள்கள் பெற்றுக் கொள்வதில் இடரா?

### கிராம அலுவலரை தொடர்புகொள்ள அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை விநியோகிப்பதற்கு உள்ளூர் வர்த்தகர்களுக்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வர்த்தகர்களிடமிருந்து உணவு மற்றும் மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் ஏதாவது இடர்பாடுகள் இருந்தால், தமது பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி அறிவித்துள்ளது.
அத்துடன் பிரதேச செயலகப் பிரிவுகளில் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் விநியோகத்தை நிர்வகிப்பதற்காக பிரதேச செயலக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ஒ,5)

## 10 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

வவுனியா,ஏப்.3
வவுனியா மாறவிலுப்பை, கந்தரோடை, பண்டாரிக்குளம், பனையுண்டான் போன்ற பகுதிகளைச் சேர்ந்த10குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
யாழ்ப்பாணம் கல்வியங்காடு நண்பர்கள் ஐக்கிய ராச்சியம் இளைஞர்களால் இந்த உதவிகள் பயனாளிகளது வீடுகளுக்கு நேற்று நேரடியாகச் சென்று வழங்கப்பட்டன. (ஐ-222)

## வீட்டுக்கே போகும் மருந்துகள்

கிளிநொச்சி, ஏப்.3
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் கிளினிக்குகளுக்குச் சென்றுவருவோருக்கான மருந்துப் பொருள்கள் அவர்களுடைய வீடு தேடிச் சென்று வழங்கப்பட்டு வருகின்றன.
கொரோனா தொற்று நோயில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுக்கும் வகையிலேயே இந்த மருந்துப் பொருள்கள் வீடுகள் தேடிச் சென்று வழங்கப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் நீரிழிவு, உளநல சிகிச்சை, இருதய நோய், உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு மாதாந்த சிகிச்சை பெறும் பொது மக்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களது விவரங்களைப் பதிவு செய்து கொண்ட பின்னர் அவர்களது வீடுகளுக்கு மருந்துகள் கொண்டு சென்று வழங்கப்படுகின்றன.
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் 0212283037 என்ற இலக்கத்துடனும், மாவட்டத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் 021228 5933, இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முழுப்பெயர், தபால் முகவரி, வயது, பால், கலந்துகொள்ளும் கிளினிக், கிளினிக் இலக்கம் (கிளினிக் கொப்பியில் எழுதப்பட்டிருக்கும்), தொலைபேசி இலக்கம் போன்ற விவரங்களை பதிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-214)




## கண்காணிப்புக்குள் இருந்த 195 பேர் நேற்று வீடுகளுக்கு

கொழும்பு, ஏப்.3
கண்காணிப்பு மையங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 195 பேர் நேற்று வியாழக்கிழமை வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று இராணுவத்தளபதி லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது
தியத்தலாவை, ரம்பேவ மற்றும் பம்பைமடு கண்காணிப்பு நிலையங்களில் தனிமைப்பட்டிருந்தவர்களே இவ்வாறு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
வெளிநாடுகளிலிருந்து வந்து வவுனியா - பம்பைமடு முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்ட 45பேரும் இதில் அடங்குகின்றனர்.
இத்தாலியிலிருந்து நாட்டுக்குத் திரும்பிய குறித்த நபர்கள் 14 நாள்கள் பம்பைமடு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தி கண்காணிக்கப்பட்டு வந்தனர்.
2 ஆயிரத்து 314 பேர் இது வரை கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 631 பேர் தொடர்ந்தும் கண்காணிப்பிலுள்ளனர்-என்றார். (எ)

## வெளிமாவட்டம் சென்றுவந்தால் தனிமைப்படுத்தவும்

மீன்களை வியாபாரத்துக்கு வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வோர் மீண்டும் பிரதேசத்துக்கு வருகை தந்த பின்னர் பதினான்கு நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் இருந்து கொள்ளுமாறு மீனவர்களுக்கு கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் பணிப்புரை விடுத்துள்ளனர்.
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்லும் மீன்களின் தரத்தை உறுதி செய்யும் நடவடிக்கை கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று முன் தினம் நடைபெற்றது. அதன்போதே மேற்கண்ட விடயம் கூறப்பட்டது. (த-150)

சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள்

# சொந்த மாவட்டங்களில் பணியாற்ற நடவடிக்கை!

**முல்லைத்தீவு,ஏப்.3**

**வடக்கு மாகாணத்தில் உள்ள சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்றவர்கள் , வெளி மாவட்டங்களுக்கு சென்று பணியாற்றியவர்கள் இனிவரும் காலங்களில் அவர்களின் இருப்பிடங்கள் உள்ள மாவட்டங்களில் தற்காலிகமாக பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம்,மன்னார்,வவுனியா மாவட்டங்களுக்கு வேலைக்கு செல்பவர்கள் அவர்கள் வாழ்கின்ற மாவட்டங்களில் தற்காலிகமாகப் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் களத்தில் வேலைசெய்கின்ற சுகாதாரப் பணியாளர்கள் கடந்த இருபது நாள்களாக கடினமாக பணியாற்றி வருகின்றனர்.

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள்,பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்,மலேரியா தடுப்பு இயக்கத்தின் உத்தியோகத்தர்கள் போன்றோர் அடங்குவர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு சென்று பணியாற்றுபவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள ஊரடங்குசட்டம் காரணமாக மாவட்டத்தை விட்டு மாவட்டம் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு அவர்கள் வாழ்கின்ற சொந்த மாவட்டங்களில் தற்காலிகமாகப் பணியாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (ஐ-19)



## முல்லையில் தொற்றுநீக்கல்

முல்லைத்தீவு, ஏப். 3

முல்லைத்தீவு நகர்ப்பகுதி வணிக நிலையங்கள், பொதுச்சந்தை மற்றும் மக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்கு தொற்றுநீக்கிகள் விசிறும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினர் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்திருந்தனர்.

தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கையில் சுமார் 30க்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் பங்குபற்றியிருந்தனர். (த-19)

## நானாட்டானில் தெருவிளக்குகள்

மன்னார், ஏப்.3

காட்டு யானை அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில் நானாட்டான் பிரதேச சபையால் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுவருகின்றன என்று நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

கடந்த பத்து நாள்களுக்கு முன்னர், நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட கற்கிடந்தகுளம் கிராமத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார். அதன் பின் தொடர்ந்தும் அந்தப்பகுதியில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் மக்களின் அவசர தேவையைக் கருத்திற்கொண்டு குறித்த பகுதிகளில் தெரு விளக்குகள் பொருத்தும் பணி நடைபெற்று வருகின்றது. கற்கிடந்த குளம், இசை மாலைத்தாழ்வு போன்ற பகுதிகளில் தெரு விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ப-213)





## ஓய்வூதியர்களுக்கு போக்குவரத்து வசதி

கிளிநொச்சி, ஏப்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் ஆயிரத்து 210 பேர் இராணுவத்தினரால் பஸ்களில் அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

தற்போது ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ-214)

## 137 பேர் மட்டுமே போக்குவரத்தை விரும்பினர்

மன்னார், ஏப். 3

மன்னாரில் ஓய்வூதியம் பெறுபவர்களில் 137 பேர் மாத்திரமே போக்குவரத்து சேவைக்காக விண்ணப்பித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்கள் வங்கிகளுக்குச் சென்றுவர விஷேட போக்குவரத்துச் சேவையை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மன்னார் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களாக இருந்தனரெனினும், 137 பேர் மாத்திரம் இந்த சேவையை பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் மீதமுள்ளவர்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் தங்கள் ஏ.ரி.எம். அட்டைகளைப் பாவித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்என்றுகூறியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-213)

# முல்லையில் மீன் ஏற்றுமதி கொரோனாவால் நிறுத்தம்

முல்லைத்தீவு, ஏப்.3

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மீன்களை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையை ஏப்ரல் 13 ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைத்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மீன் ஏற்றுமதி போக்குவரத்துச் சங்கத் தலைவர் மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கடல் உணவுகளை ஏற்றுமதி செய்யும் சங்கத்தின் பல ஊர்திகள் மீன்களைக் கொண்டு செல்வதில் அனுமதி பெறும் நடவடிக்கையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றன. தென்பகுதிக்குச் சென்றுவரும் கூலர் வாகனங்கள் மற்றும் ஐஸ் பெட்டிகள் ஊடாக வைரஸ் தொற்று ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது. இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட கரையோர மீனவர்கள் தங்கள் தொழில் நடவடிக்கையை குறைத்து கடல் உணவுகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மக்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதனால் 13ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து தென்பகுதிக்கு மீன்களை ஏற்றுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-19)



# மலேசியாவில் 2,000 இந்தியர்கள்!!

கோலாலம்பூர், ஏப். 3
மலேசியாவில் சிக்கித் தவிக்கும் தமிழர்கள் உட்பட 2 ஆயிரம் இந்தியர்களை மீட்டு அழைத்து வரவேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.
கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு உத்தரவு, உள்நாட்டு, வெளிநாட்டு விமானச் சேவை ரத்து ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் திருமணம், சுற்றுலா, வேலை நிமித்தமாக ஆயிரம் தமிழர்கள் உட்பட 2 ஆயிரம் இந்தியர்கள் கடந்த மாதம் மலேசியாவுக்குச் சென்றனர். விமானச் சேவை கைவிடப்பட்டதால் அவர்களால் இந்தியா திரும்பி வர முடியாதுள்ளது. அவர்களை இந்தியாவுக்கு விரைவில் அழைத்துவர வேண்டும் என்று அவர்களின் உறவுகள் இந்திய வெளியுறவுத் துறையைக் கோரியுள்ளனர். (ம)

# இந்தியாவில் 2ஆயிரம் பேருக்குக் கொரோனா

## 10 இடங்கள் தொடர்பில் உச்சக்கட்ட அவதானம்!

*புதுடெல்லி, ஏப்ரல் 3*
*இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரமாக அதிகரித்தது. நேற்று மாலை வரையில் 60 பேர் கொரோனாவால் உயிரிழந்தனர். இதையடுத்து 10 இடங்களை உச்சக்கட்ட ஆபத்தான பிரதேசங்களாக இந்திய அரசு அறிவித்துள்ளது.*


சீனா அளவுக்கு இந்தியாவிலும் கொரோனாவின் தாக்கம் உணரப்படலாம் என்று இந்திய வல்லுனர்கள் முன்னதாகவே எச்சரித்தனர். இதையடுத்து இந்தியப் பிரதமர் மோடி 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவை அங்கு அறிவித்துள்ளார். எனினும் கிடுகிடுவென அங்கு கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.
கொரோனாவின் இந்தத் தீவிர பரம்பலுக்கு 10 இடங்கள் முதன்மைக் காரணமாக அமைந்தன என்று இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது. டெல்லி, கேரளா, உத்தரபிரதேசம், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் தலா 2 இடங்களும், குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு இடமும் இந்தப் பட்டியலில் உள்ளன. அத்துடன், சமூக இடைவெளியே சாத்தியமில்லாத சேரிப்புறப் பகுதிகளிலும் கொரோனாவில் பரம்பல் உறுதிசெய்யப்பட்டுள்ளதாவும் இந்தியாவில் பேரச்சம் குடிகொண்டுள்ளது. (ம)



# தமிழகம் முழுவதும் ஆபத்தான வலையம்

## முதல்வர் எடப்பாடி அறிவிப்பு

சென்னை, ஏப். 3
கொரோனாவால் இந்தியா பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நிலையில், தமிழகம் முழுவதையும் கொரோனா பரவுவதற்கு ஏதுநிலைகொண்ட பேராபத்தான பகுதி என்று அறிவித்துள்ளார் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி.
'தமிழகத்தில் கொரோனா நோயாளர்கள் அவதானிக்கப்பட்டுள்ளனர் என்பது அனைவரும் அறிந்ததே. எனினும் கொரோனா தொடர்பான அச்சம் இல்லாமல் மக்கள் நடந்து கொள்கின்றமை வேதனை தருகின்றது. மக்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய காலமாக இது உள்ளது. தமிழகம் கொரோனா பரவுவதற்கு ஏதுநிலைகொண்ட பேராபத்தான பகுதியாக உள்ளது' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



இந்தியாவில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கு பொதுமக்கள் வெளியில்வர அனுமதிக்கப்படுகின்றது. இந்திய உழவர் சந்தையொன்றின் ஒளிப்படமே இது. சமூக இடைவெளியைக் கருத்தில்கொண்டு இந்த உழவர் சந்தை அமைக்கப்பட்டுள்ளது. (ம)

# மோடி மக்ரோன் ஆலோசனை

புதுடெல்லி, ஏப். 3
கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்பாக பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோனுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.
இத்தாலி, ஸ்பெய்னைத் தொடர்ந்து, இந்த வைரஸால் அதிக அளவில் பாதிப்புக்குள்ளான நாடாக பிரான்ஸ் இருக்கிறது. அங்கு கொரோனா தொற்றுக்கு இதுவரை 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கின்றனர். லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில், பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோனுடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடலில் ஈடுபட்டார். கொரோனா வைரஸை எதிர்கொள்ள உள்நாட்டு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் எதிர்கொள்ள எத்தகைய வழிமுறைகளை கையாள வேண்டும் என்பது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# 24 மாத ஊதியத்தை வழங்கினார் கம்பீர்!

புதுடெல்லி, ஏப். 3
கொரோனா வைரஸுக்கு எதிராக இந்திய தேசம் நடத்திவரும் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரபலங்கள், திரை நட்சத்திரங்கள், நிறுவனங்கள், தனி நபர்கள் பிரதமர் கேர்ஸ் நிதிக்கு உதவி செய்து வரும் நிலையில் பாஜக எம்.பி.யும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான கவுதம் கம்பீர் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
இந்தியாவில் கொரோனா வைரஸின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. உயிரிழந்தோர் எண்ணிக்கை 50ஆக அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசும், மாநில அரசுகளும் எடுத்து வருகின்றன.
இந்தத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு போதுமான நிதி தேவை என்பதால், 'பிரதமர் கேர்ஸ் நிதி' உருவாக்கப்பட்டு அதில் நிதியளிக்க பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார். பிரதமர் மோடியின் வேண்டுகோளை ஏற்று திரை நட்சத்திரங்கள், நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனி நபர்கள், அரசியல் வாதிகள் நிதியுதவி அளித்து வருகின்றனர்.
இதில் பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான கவுதம் கம்பீர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஏற்கனவே ஒரு கோடி ரூபாவை (இந்திய மதிப்பில்) அறிவித்தார். தற்போது மற்றொரு அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார். அதன்படி, அடுத்த 2 ஆண்டுகளுக்கு தனது ஊதியம் முழுவதையும் பிரதமர் கேர்ஸ் நிதிக்கு வழங்குவதாக கம்பீர் அறிவித்துள்ளார். (ம)

## ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

தெஹ்ரோன், ஏப். 3
ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தினால் அந்த நாடு கடுமையான விளைவைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஈரானின் தாக்குதல் குறித்து அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்ட செய்தியைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இதனைத் தெரிவித்தார்.
இதுகுறித்து ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது: 'ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள் மீது ஈரான் ஒருவேளை தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தால், ஈரான் அதற்கான மிகப் பெரிய விலையைக் கொடுக்க நேரிடும்' என்றார்.
முன்னதாக, ஈராக்கில் கடந்த மாதம் அமெரிக்க ராணுவமும், ஈரான் ஆதரவு தீவிரவாதிகளும் மோதலில் ஈடுபட்டனர். மார்ச் மாதம் ஈராக்கில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் இரு அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதற்கு மறுநாள் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா முஜாகிதீன் அமைப்பின் தீவிரவாத முகாம் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக ஈராக்கிலுள்ள அமெரிக்க ராணுவ நிலை மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில், அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்தார். இதற்குப் பதிலடியாக பாக்தாத் விமான நிலையம் அருகே அமெரிக்க ராணுவம் ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் தளபதி குவாசிம் சுலைமான், ஈராக்கின் ஹஸ் அல் ஷபாபி துணை ராணுவப் படையின் துணைத்தலைவர் அபு மஹதி அல் முஹன்திஸூம் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஈரான் இடையே மோதல் வலுத்துள்ளது. (ம)

## கொரோனா கோரத்தாண்டவம்

# பாதிப்பு 10 லட்சம் உயிரிழப்பு 50,000!

வுகான், ஏப்ரல் 3
கொரோனா வைரஸ் உலக அளவில் தனது கோரத் தாண்டவத்தைத் தொடர்ந்து வருகின்றது. இந்த வைரஸால் இதுவரை 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழப்பு எண்ணிக்கை 50 ஆயிரமாக அதிகரித்தது.

சீனாவின் வுகான் மாநகரில் கடந்த டிசெம்பர் இறுதியில் கொரோனா வைரஸ் இனங் காணப்பட்டது. பின்னர் வுகானில் இருந்து சீனா முழுவதும் தீவிரமாகப் பரவிய இந்த வைரஸ் தற்போது உலக அளவில் கோரத் தாண்டவமாடி வருகின்றது. சீனாவை விட பல்வேறு நாடுகள் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. உலக அளவில் 10 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 50 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் ஒரு லட்சத்து 95 ஆயிரம் பேர் நலம்பெற்று வீடு திரும்பியுள்ளனர். சுமார் 36 ஆயிரம் பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. (ம)



## இஸ்ரேல் சுகாதாரத் துறை அமைச்சருக்கு கொரோனா

டெல்அவிவ், ஏப். 3
இஸ்ரேல் சுகாதாரத் துறை அமைச்சருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு உயர் அதிகாரிகள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
இதுகுறித்து இஸ்ரேல் ஊடகங்கள், 'இஸ்ரேலில் சுகாதாரத் துறை அமைச்சர் யாகோவ் லிட்ஸ்மனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்' என்று செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## கொரோனா வைரஸால் அமெரிக்கா பேரதிர்ச்சி

நியூயோர்க், ஏப். 3
கொரோனா வைரஸால் அடுத்த இரண்டு வாரங்கள் அமெரிக்காவில் பெரும் துன்பகரமான சம்பவங்கள் இடம்பெறும் என்று ட்ரம்ப் எச்சரித்த நிலையில், நேற்றுமுன்தினம் மட்டும் அங்கு ஆயிரத்து 49 பேர் உயிரிழந்தனர்.
சீனாவின் வுகான் நகரில் தோற்றம் பெற்ற கொரோனாவால் தற்போது அமெரிக்கா பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. கொரோனாவால் உலக அளவில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவே முதலிடத்தில் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் வரையில் 5 ஆயிரத்து 102 பேர் உயிரிழந்தனர். 2 லட்சத்து 15 ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். உச்சக்கட்டமாக நேற்றுமுன்தினம் மட்டும் 26 ஆயிரத்து 473 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 49 பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

# உயிரிழப்பு எண்ணிக்கையை மறைத்து உலகுக்குத் துரோகம் செய்தது சீனா!

## அமெரிக்கா பரபரப்புக் குற்றச்சாட்டு

பீஜிங், ஏப். 3
கொரோனாவால் சீனாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 350 என்று சீனா கணக்குக் காட்டியுள்ள நிலையில், இந்தத் தொகை பிழையானது. சீனா உண்மையான தொகையை மறைத்து உலகத்துக்குத் துரோகம் இழைத்துள்ளது என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.
இது தொடர்பில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
'சீனாவின் தரப்பில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கை முற்றிலும் தவறானது. அவர்கள் உயிரிழப்பு எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டியுள்ளனர். இது உலக நாடுகள் கொரோனா குறித்து மெத்தனமாக இருந்துவிட வழியேற்படுத்தியுள்ளது. மனிதனிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் வைரஸ் குறித்து உலகத்திற்கு சீனா பொய்யுரைத்துள்ளது. உண்மையை கூற விரும்பும் பத்திரிகைகள், மருத்துவர்களை வாயை அடைத்து விட்டது. தற்போது உண்மையான எண்ணிக்கையை மறைத்து வருகிறது' என்றுள்ளது.
முன்னதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், 'யாருக்குத் தெரியும். அவர்கள் உயிரிழப்பு எண்ணிக்கையைக் குறைத்துக்காட்ட அதிக வாய்ப்புகள் உள்ளன' என்று தெரிவித்திருந்தார். (ம)



# ஆபத்தானது கொரோனா!

## டைபாலா எச்சரிக்கை

உரோம், ஏப். 3
கொரோனாவால் தாக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்துள்ள டைபாலா, கொரோனா உண்மையில் ஆபத்தானது. ஆதலால் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என்று எச்சரித்துள்ளார்.

கொரோனா தொடர்பில் டைபாலா மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு நாட்களும் ஏராளமான மக்கள் மடிந்து வருகிறார்கள். விஷயம் மிகவும் மோசமாகி வருகிறது. கொரேனா வைரஸால் பாதிக்கப்படுவேன் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. வீட்டுக்குள்ளேயே தங்கியிருங்கள் என்ற வார்த்தை பொய்யல்ல. மிகவும் கவனமாக இருங்கள்.

எனக்கு மோசமான இருமல் இருந்தது. தூங்கும்போது மிகவும் சோர்வாக இருந்தேன். குளிராக இருப்பது போன்று உணர்ந்தேன். முதலில் இது என்னவாக இருக்கும் என்பது குறித்து நினைக்கவில்லை. ஆனால், எனது அணியில் உள்ள சக வீரர்கள் இருவருக்கு உறுதி செய்யப்பட்ட பிறகு, எனக்குத் தொற்றிக் கொண்டது உறுதியானது.

எங்களுக்குத் தலைவலி இருந்தது. ஆனால், எதையும் நாங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. கழகம் எங்களுக்கு விட்டமின்கள் கொடுத்தது. அதன் பின் நாங்கள் குணமடைந்து வந்ததை உணர்ந்தோம். இது மனநிலையை பொறுத்தது. முதலில் பயமாக இருந்தது. தற்போது சரியாகி விட்டது - என்றுள்ளார். (ம)



# பிற்போடப்பட்டது யூரோ கிண்ணம்!

லிஸ்பன், ஏப்ரல் 3

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான யூரோ கிண்ணக் கால்பந்துத் தொடர், கொரோனா அச்சம் காரணமாகப் பிற்போடப்பட்டது.

சீனாவில் தோற்றம்பெற்ற கொரோனா தற்போது உலக அளவில் பரவலாகியுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் கொரோனா ருத்ர தாண்டவம் ஆடிவருகின்றது. இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகளாக உள்ளன. மட்டுமல்லாமல் நெதர்லாந்து, போர்த்துக்கல், சுவீடன், டென்மார்க் உள்ளிட்ட நாடுகளிலும் கொரோனா ஓரளவு தாக்கம் செலுத்தியுள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகளில் கால்பந்துத் தொடர்கள் நடத்த சுமார் 6 மாதங்களாவது ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் யூரோ கிண்ணத் தொடர் பிற்போடப்பட்டுள்ளது. (ம)




## தொடுதிரைக் கடிகாரத்துக்கு தடைவிதித்தது இங்கிலாந்து

லண்டன், ஏப். 3
ஊழல் தடுப்பு விதிமுறைகளைக் கடுமையான வகையில் கடைபிடிக்கும் வகையில் வீரர்கள் தொடு திரைக் கடிகாரங்களைப் பயன்படுத்தத் தடைவிதிக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

கிரிக்கெட் வீரர்கள் சிலர் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் ஒட்டுமொத்த கிரிக்கெட் மீதும் ரசிகர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு நாடுகளும் ஊழல் கண்காணிப்புக்குழுவை ஏற்படுத்தி சூதாட்டத் தரகர்கள் வீரர்களைத் தொடர்பு கொள்ளாத வண்ணம் கண்காணித்து வருகிறார்கள். சில நாடுகள் வீரர்களுக்குக் கட்டுப்பாடுகளையும் விதித்து வருகின்றன. இந்த வரிசையில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தொடுதிரைக் கடிகாரங்களைப் பயன்படுத்த தனது வீரர்களுக்குத் தடை விதித்துள்ளது. (ம)

## வெளிநாட்டு வீரர்கள் இல்லாமல் ஐ.பி.எல்!




புதுடெல்லி, ஏப். 3
வெளிநாட்டு வீரர்கள் இல்லாமல் ஐ.பி.எல் தொடரை நடத்தலாம் என்று ஐ.பி.எல் தொடரில் பற்கேற்கும் அணிகளில் ஒன்றான ராஜஸ்தான் ரோயல்ஸின் உரிமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னதாக நாம் இந்தியர்கள் மட்டுமே விளையாடும் ஐ.பி.எல் தொடர் பற்றி யோசிக்கவில்லை. ஆனால் இப்போது எம்மிலிருந்தே தேர்ந்தெடுத்து விளையாடும் அளவுக்கு தரம் உள்ளது. இந்தியர்கள் மட்டுமே விளையாடும் ஐ.பி.எல் தொடரை நடத்துவது சிறந்தது. அது தொடர்பில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முடிவெடுக்கும் - என்றார். ஐ.பி.எல் தொடர் தொடர்பில் இந்த மாதம் 16ஆம் திகதி இறுதிக்கட்டப் பேச்சு நடத்தப்படவுள்ளது. அந்தக் கலந்துரையாடலில் குறைந்த ஆட்டங்களுடன் தொடரை நடத்துவது, இந்திய வீரர்களை மட்டுமே வைத்து தொட ரை நடத்துவது, மூடிய மைதானத்துக்குள் தொட ரை நடத்துவது உள்ளிட்ட சில விடயங்கள் பரிசீலிக்கப்படவுள்ளது என்றும் முன்னதாகத் தகவல் வெளிவந்தமை குறிப்பி டத்தக்கது. (ம)

# இந்தியா – ஆஸ்திரேலியா தொடர் இன்னொரு ஆஷஸ்

## ரிம் பெய்ன் பெருமிதம்

சிட்னி, ஏப். 3
இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெறும் டெஸ்ட் தொடர் இன்னொரு ஆஷஸ் தொடர் போன்றது - என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிம் பெய்ன்.

இந்த வருடத்தின் இறுதியில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நடைபெறுவதாக இருந்தது. கொரோனா அச்சம் காரணமாக கிரிக்கெட் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான தொடர்தான் கொரோனாவுக்குப் பின்னரான கிரிக்கெட் உலகின் முதல் தொடராக அமையும் என்று கருதப்படுகின்றது.

இந்த நிலையில் தொடர் குறித்து பெய்ன் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவது வெற்றி பெறுவதற்காக. ஒவ்வொரு டெஸ்ட் போட்டியும் முக்கியமானது. எங்களுடைய நோக்கம் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டிக்கு முன்னேற வேண்டும் என்பதுதான். ஆகவே கடந்த முறை என்ன நடந்தது என்று நினைக்காமல் தற்போது நடக்க வேண்டியதில் கவனம் செலுத்துவோம்.

தற்போது நாங்கள் மிகவும் வேறுபட்ட அணி. அவர்களுடைய (இந்திய அணி) அணியும் சற்று வித்தியாசமானதுதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இரண்டும் தரனமான அணிகள். இது மிகவும் எதிர்பார்க்கக்கூடிய தொடராக இருக்கும். ஏனென்றால் இதற்கு முன் இப்படி கிரிக்கெட்டின் தரத்தை பார்க்கும் நிலை இல்லாமல் இருந்தது. இதனால் இந்தியா ஆஸ்திரேலியா இடையிலான தொடர் ஆஷஸ் தொடர் போன்று இருக்கும். நாங்கள் இதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்றார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.